கனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

"Telegrams: "ILWA", Coimbatore. Telephone: 22648

THE INDUSTRIAL LABOUR WELFARE ASSOCIATION LTD.,

1. Siddha Research Lab, Conti Buildings, Coimbatore — Phone: 26618
2. Research Garden, Podanur — Phone: 24008
3. I. L. W. A. Ltd., New Buildings, Coimbatore — Phone: 22648

G. D. Naidu,
President and Adviser:
I. L. W. A. Ltd.
Udumalpet Service
United Motors (CBE) Private Ltd.
Life Book Depot
Siddha Research Lab
Research Garden

Avanashi Road, COIMBATORE-18.

Date: 6-3-1972

Ref: ....

MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY - TANJORE - THE TANJORE
RECEIVED
3-APR 1972

தென்மொழி ஆசிரியர் பெருஞ்சித்திரனார்,

அவர்களுக்கு, ஜி.டி. நாயுடு எழுதிக் கொண்டது

நீங்கள் தமிழ் நாடு தனியாக பிரிய வேண்டும் என்ற முயற்சி செய்வதை ஒரு ஐந்து ஆண்டுகளுக்கு தள்ளி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஐந்து ஆண்டுக்குள் இவ்விதம் செய்ய வேண்டும் என்று என்ன காரணங்கள் இருந்தனவோ அவை நீங்காவிடில் ஐந்து ஆண்டுகளுக்குப் பின் நான் உங்களோடு சேர்ந்து உழைப்பேன் என்பதை இதனால் தெரியப்படுத்துகிறேன்.

இப்படிக்கு அன்புள்ள,

G. Naidu

பெறுபவர்:

தென்மொழி ஆசிரியர்,
பெருஞ்சித்திரனார்,
கடலூர்.

சுவடி: 9
ஓலை: 11
விலை: 75காசு

நமக்கு வந்த மடல்கள்.

0: 301: அன்புள்ள ஐயா! வணக்கம். தங்களின் 'யாருமில்லை நாங்கள் தாம்' மிகத் தெளிவான கருத்துரையே. இருப்பினும் முதல் வரின் மாநிலத்தன்னாட்சி முறையை இகழ்ந்து தாங்கள் கூறியிருப்பது ஏற்கமுடியாதது. வங்கத்தின் தலைவரும் முதலில் 'மாநிலத் தன்னாட்சி' முறையை வற்புறுத்தி அதனைப் பெறமுடியாமல் ஒடுக்கப்பட்ட போது 'வங்கத்தின் விடுதலை'யை வற்புறுத்தி அதனையே பல இன்னல்களுக்குப் பிறகு பெற்றார். நமது முதல்வரின் கொள்கையும் இதுவாகத்தான் இருக்குமேயன்றி வேறன்று. நம்மைப் போன்றவர்கள் ஒருபெரும் பொறுப்பின் கீழ் இருப்பவர்கள் அல்லர். இருப்பினும் தமிழகத்தின் குடிமக்கள், பிரிவினையை விரும்புகின்றவர்கள். முதல்வரோ ஒரு நாட்டை வழிநடத்திச் செல்பவர். இத்தகைய பெரும் பொறுப்பின் கீழ் உள்ள அவர்,

'ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து'

எனும் வள்ளுவரின் வாயுரையை நினைவில் கொண்டு செயல் படல் வேண்டும். செயல் படுகின்றார் என்றே கருதுகின்றோம். எனவே அவர் அவ்வாறு பேசியது தவறன்று; தவறாகப் பொருள் கொண்டது உங்களின் தவறாகும். நான் தங்களின் தமிழகப் பிரிவினைக்கு என்றும் தங்கள் வழிநடப்பேன் என்று இதன் மூலம் உறுதி கூறுகின்றேன்.

இல. இராமதாசு. பச்சையப்பன் கல்லூரி, காஞ்சி.

0: 302: ஐயா, தென்மொழி ஓலை 8, 9, 10 இதழ்களில், "பார்ப்பானையே குறைகூறிப் பயனில்லை"; "யாருமில்லை; நாங்கள் தாம்!" என்ற ஆசிரியவுரைகளைப் படித்தேன். திருச்சி மாவட்டத் திராவிடர் கழக மாநாட்டில், தங்கட்கு எழுதிய கடிதம் பற்றி திரு. சி. டி. நாயுடு அவர்கள் பேசியதையும் 'விடுதலை'யில் படித்தேன். 'தமிழ்நாடு தனியாக விடுதலை அடைவதால் பெரும் கேடு வந்து விடாது' எனும் கருத்துக்காகப் போராடுமுன் அக்கருத்துக்குத் துணை தேடிக்கொள்ள வேண்டும். 'பார்ப்பானையே குறை கூறிப் பயனில்லை' எனும் கட்டுரையில் தாங்கள் எழுதிய கண்ணோட்டத்தில் நடந்தால் தமிழ் நாட்டுப் பார்ப்பனர்களும் நாட்டு விடுதலைக்குத் துணைநிற்க முன்வரலாம். தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களுள்ளும் மூடத்தனங்களையும், சாதி வேற்றுமைகளையும் விட்டவர்கள் உள்ளனர். ஆனால், தனித்தமிழ் நாட்டில் தமக்குக் கேடு வருமோ என அஞ்சுகின்றனர். அவ்வச்சத்தை அகற்றும் வகையில், பகை நட்பாக் கொண்டொழுகும் பண்பில் நடந்தால் தமிழக விடுதலை விரைவில் வரும் என்பது எனது தாழ்மையான துணிபு.

—நா. திருமலை, க.இ. (வணிகம்) மதுரை – 16.

0: 303: "யாருமில்லை; நாங்கள் தாம்!" என்பதற்கும் மிகமிக முன்னதாகப் "பார்ப்பானையே குறைகூறிப்பயனில்லை!" என்னும் கருத்தைத் தமிழரிடை விரிவாக எடுத்துக்கூறி, அவரை முதலில் மன விடுதலை பெறச்செய்து ஒன்று படுத்த வேண்டுவதே தென்மொழியாளர்களின் முதற்கடமை என்பது என் தாழ்மையான கருத்து. அடுத்து, உட்பகையை இனங்காட்டி அதை வலுவிழக்கச் செய்து புறப்பகையை எதிர் கொள்ளல் வேண்டும். இவ்விரண்டு பணிகளை

[தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம் பார்க்க]



தென்மொழி

இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 9: ஓலை: 11.

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

கும்பம் தி. பி. ௨00௩ - (பெப்-மார்ச்சு- 1972.)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.

தமிழகப் பிரிவினை தேவையே!

ஒருவரோ டொருவர் சேர்ந்து வாழ்வது எப்படி ஒரு மெய்ப்பொருளோ, அப்படியே பிரிந்து வாழ்வதும் ஒரு மெய்ப்பொருளே! சேர்ந்து வாழ்வதால் நன்மைகள் சில பெறுவதைப் போலவே, பிரிந்து வாழ்வதிலும் நன்மையுண்டு. இவ்விடத்தில் 'சேர்ந்து' என்பதற்கு எப்படி 'வேற்றுமையற்ற முறையில் இணைந்து' என்று பொருள் கொண்டுவிடக் கூடாதோ, அல்லது அவ்வாறு மட்டுந்தான் பொருள் படுத்திக் கொள்ளக் கூடாதோ, அப்படியே 'பிரிந்து' என்பதற்கும் 'பகைமையுற்ற நிலையில் வேறுபட்டு' என்று பொருள் கொண்டுவிடக் கூடாது; அல்லது அப்படி மட்டுந்தான் என்று பொருள் படாது. தனிமொழி, பண்பாடு, வரலாற்று அடிப்படை, குமுகாயப் பொருளியல் அரசியல் அடிப்படைகளே ஓர் இணைந்துள்ள நாட்டின் பகுதி மக்களைப்

பிரிவினை எண்ணத்திற்குத் தூண்டுகின்றன. இணைந்து வாழ்வதற்கும் அவையே அடிப்படைகளாகின்றன. இவ்வடிப்படைகளால் இணைப்பு நிலைக்கு எப்படிச் சார்புநிலைக் கரணியங்கள் காட்ட முடியுமோ, அப்படியே அதே அடிப்படைகளைக் கொண்டு பிரிவு நிலைக்கும் சார்பு நிலைக் கரணியங்கள் காட்ட முடியும். இப்படிப் பட்ட நிலையில் பிரிய வேண்டும் என்ற எண்ண எழுச்சிக்குத்தான் அடிப்படையைக் காண வேண்டுமேயன்றி, பிரிந்து போகக்கூடாது என்பதற்கான அடிப் படையை எவரும் ஆராய்தல் தேவையில்லாதது. மாந்தனின் தனிப் பட்ட ஒரு நிலைப்பாடு என்பது வேறு. ஒரு நாட்டின் தனிப்பட்ட ஒரு நிலைப்பாடு என்பது வேறு. இரு வேறுபட்ட அடிப்படை அமைப்புகள் அமைந்த இரு நாடுகளோ, இனங்களோ ஒன்றோடு ஒன்றை இணைப்புச் செய்து கொள்ள விரும்புவதால் எப்படிச் சிலர்க்குச் சில நன்மைகள் விளையத்தான் செய்யுமோ, அப்படியே அவை இரண்டும் தம்முள் தனித்தனிப் போக்குகளை ஏற்படுத்திக்கொள்ள முனைவதாலும் சில நன்மைகள் விளையத்தான் செய்யும். முன்னைய நன்மைகளைக் காட்டிப் பின்னைய நன்மைகளை மறுப்பது அறியாமை யாகும். அவ்வறியாமை நல்ல அரசியல் அறிவாகாது; மாந்த மெய்ப்பாட்டியலுக்கு ஒத்ததாகவும் கருதப்பெறாது.

பெரும்பாலும், இரு வேறு நிலப்பகுதிகளின் இணைப்பு நிலைக்கு எப்படி வரவேற்பு இருக்குமோ, அப்படியே பிரிவு நிலைக்கும் வரவேற்பு இருக்கத்தான் செய்யும். இதில், இரு நிலைகளையும் நன்கு விளங்கிக் கொண்டு செயலாற்றுவதில்தான் அறிவு துணைநிற்க வேண்டுமே தவிர, மட்டையடித்தனமாக ஒன்றிற்காக ஒன்றைத் தவிர்த்து விட முயற்சி செய்வதற்கு அறிவுத்துணை தேவையே இல்லை. குருட்டுத் தன்மை என்பது அறிவு நிலையில் இருசாரார்க்கும் பொதுவே! ஆள்பவனுக்கு அந்நிலை குறைவாக இருக்குமென்றோ, ஆளப்பெறு வோர்க்கு அது மிகுந்திருக்குமென்றோ கருதுகின்றவன் காலப்போக்கில் புறந்தள்ளப் பட்டு விடுவது இயற்கை. பிரிவு என்பது பகையாகாது. இணைப்பு என்பது நட்பும் ஆகிவிடாது. எனவே பிரிவு என்றவுடன் வெகுண்டெழக் கூடியவனோ, முகத்தைச் சுளிப்பவனோ, இணைப்பு நிலைபற்றிப் பேசுவதற்குத் தகுதியற்றவ னுவான். தாயை மகள் பிரிவதற்கும் காலம் ஒன்று உண்டு என்பதையும், குஞ்சைத் தாய் தனித்து வாழ விடுவதற்கும் அடிப்படை உண்டு என்பதையும் அரசியல் மூடர்கள் எண்ணிப் பார்த்தல் வேண்டும். பிரிந்து போவதைத் தடுப்பவன் ஒருகால் இணைந்திருக்கும் நிலையினால் மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ அந்நிலையினால் ஊதியம் பெறுவோனுகத்தான் இருக்க வேண்டும். தாய்மைப் பாசத்துடன் பிரிவைத் தடுப்பவன்

ஓரின மக்களின் வளர்ச்சியைத் தடுக்கும் அறியாமையைச் செய்கின்ருன். தனி மாந்த நிலையிலும், பொதுமாந்த அல்லது குமுகாய நிலையிலும் 'பிரிவு' என்பதையும் 'இணைப்பு' என்பதையும் ஒரே பொருளுடைய சொற்களாகக் கருதிக்கொள்ளக் கூடாது. அதனுல் பிழைகளும் கடுமையான விளைவுகளுமே எஞ்சும்.

இவ்வுலகம் தோன்றியதிலிருந்து தன்னுடன் இணைந்துள்ள ஒரு நாட்டைப் பிரிந்து போவதற்கு மன நிறைவோடு இசை வளித்த வேருெரு நாடு இருந்ததே இல்லை. அந்த நாடு தன்னெடு சேர்ந்திருப்பதால் தன் நாட்டுக்கு ஏதோ ஒரு வகையில் இழப்பு என்பதை உணர்ந்தாலன்றி, சேர்ந்துள்ள நாட்டின் நன்மைக்காக - தனிநிலைக் கோட்பாட்டின் படி - உரிமைக்கு ஒப்பிய நாடோ, ஒரு தலைவனே முன்னறிவோடு நடந்துகொண்டதாக இன்றுவரை வரலாறு இல்லை. ஒவ்வொரு நிலையிலும் கண்ணீரும் குருதியும் சிந்தப் பெற்றுத்தான் ஒரு நாட்டின் வல்லதிகாரத்தினின்று அதன் பகுதி நாடுகள் விடுபாடு கொண்டிருக்கின்றன. இந்நிலைக்கு மாந்த முன்னறிவோடு ஒப்புதல் தரக்கூடிய பேரறிஞன் என்றும் ஒரு நாட்டின் தலைவனுக இருந்ததில்லை. அதனுலேயே ஒரு நிலத்தில் பல கொடிகள் அடுத்தடுத்துப் பறந்திருக்கின்றன; கிழித்தெறியப்பட்டிருக் கின்றன. இப் பொது மெய்ப்பாட்டியல்களின் அடிப்படையில்தான் 'தமிழகப் பிரிவினை'யை விளங்கிக் கொள்ளல் வேண்டுமேயன்றி, மனச்செருக்குடனே அறிவுச்செருக்குடனே ஆளுமை அதிகாரச் செருக்குடனே இச்சிக்கலைத் தீர்க்க முனைவது யாகியாக்கானின் முட்டத்தனத்தைப் போன்றது; அயூப்கானின் அகங்காரத்தைப் போன்றது; சார் மன்னனின் கொடுமையைப் போன்றது. அத்தகையோர்க்கு இத்தகு மெய்ப்பாட்டியல்(உண்மைக் கூறுபாடு)களால் விடை சொல்லிக் கொண்டிருக்கத் தேவையில்லை; வேறு வகை மெய்ப் பாட்டு இயல்(உடல் முயற்சிக்கூறுபாடு)களாலேயே விடை சொல்லுதல் வேண்டும். உண்மையின் வலிவைப் புறக்கணிப்பவர்கள், உடல்வலிமையை என்றும் புறக்கணித்ததில்லை. வரலாறு முன்னேக்கித்தான் போகுமேயன்றி, பின்னேக்கிப் போனதில்லை. எனவேதான் தமிழகப் பிரிவினையை ஏதோ தீண்டத் தகாதவனின் கோரிக்கையைப் போல் கருதிக்கொண்டு குதிக்கும் இந்திரா அம்மையாருக்கும், அவரைப்போன்ற பிறர்க்கும் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகின்ருேம். தீண்டத் தகாதவனையும் தீண்டவேண்டும் என்று சட்டமியற்றும் காலம் இது. அதற்குத் தகுந்தவாறு மக்களின் இயற்கையான-கூர்தலற - மனவெழுச்சிகளை விளங்கிக்கொண்டு அவற்றிற்குச் செவிசாயுங்கள். இல்லையெனில்

யாகியாக்கானைப் புறங்கண்ட உங்களை, அதே மெய்ப்பாட்டுக்காக நாங்கள் புறங்காண நேரும். எங்கள் இனத்திலும் உங்களிடம் வந்து பொறுக்கித்தின்ன நினைக்கும் ஓரிரண்டு சுப்பிரமணியன்களும், பக்தவத்சலங்களும், அண்டேக்களும் இருக்கலாம். தமிழ் மக்களின் குடுமி வடவனின் கைகளில் சிக்கியிருப்பதால் அத்தகையோர்க்கு ஏதாகிலும் நன்மைகள் கிடைத்து வரலாம். அவற்றுக்காக அவர்களின் வாய்கள் இப்பிரிவினையெழுச்சியின்மேல் குப்பைகளையும் சருகுகளை யும் வாரியெறியலாம். ஆனால் அவற்றையே பற்றிக்கொண்டு கனன்றெழுகின்ற உரிமைத்தீ, விடுதலை உணர்வு அவர்களையும் தீய்த்து – உங்களையும் முகங்கருக்குகின்ற நாள் ஒன்று வரத்தான் வரும். அந்த நல்ல நாளை வரவேற்க அணியமாகிக் கொள்ளுங்கள் என்பதையே தென்மொழி உங்கட்கு முன் எச்சரிக்கையாக முழங்கு கின்றது என்று கருதிக்கொள்ளுங்கள்.

தென்மொழியின் இந்தப் போக்கைப் பொறுமையும், பொச்சரிப்பும் உடைய சிலர் ‘தன்முனைப்பு’ என்னலாம்; ‘தன்னழுத்தம்’ என்னலாம்; சிலரோ தம் கட்சித்தலைவர்களைக் கொண்டு மட்டுந்தான் இக்கோரிக்கை முழங்கப் பெறல் வேண்டும் என்று ‘கந்தாயம்’ பேசலாம். ஆனால் தென்மொழியைப் பொறுத்த வரை இனி எந்தத் தமிழகத் தலைவரையும் நம்பிப்பயனில்லை என்ற நிலை தெளிவாக உணரப் பெற்று விட்டது. எதற்காகச் சட்டமன்றம் போகவேண்டும் என்று தொடக்க நிலையில் தமிழகப் பிரிவினையை விரும்பிய தலைவர்கள் கரணியங்கள் காட்டினரோ, அந்தக் கரணியங்கள் அவர்கள் அமர்ந்த பதவி நாற்காலிகளுக்கு ஆணிகளாக அறையப் பெற்று விட்டன; அவர்களின் மனைவி மக்களுக்கும் எதிர்காலப் பிறங்கடைகளுக்குமான ஒப்பந்தப் பட்டயங்களாகவும், நில புலம் வீடுகளாகவும் மாற்றப் பெற்று விட்டன. இன்னும் விளக்கமாகச் சொன்னால் அவர்கள் தங்களுக் குள்ளேயே எவரெவர் முன்னே போவது; எவரெவர் பின்னே வருவது என்ற போராட்டத்தைவேறு எழுப்பிக் கொண்டு விட்டனர். தமிழர் வடவரோடு ஒட்டி உறவாடவேண்டியதற்காகக் கூறப்பெறும் ஒருமைப் பாட்டின் பகட்டான போலி உரைகளைப் போலவும் செயல்களைப் போலவும், நம்மை யாள வந்த – வழி நடத்திச் செல்ல வந்த தலைவர்க ளிடையில் போலியான ஓர் உடன்பிறப்புப் பாசமும் ஒற்றுமை யுணர்வும் பேசப்பெறுகின்றன; காட்டப் பெறுகின்றன. அவர்கள் உள்ளத்திலிருப்பதெல்லாம் ஒருவரை ஒருவர் எடுத்து விழுங்கு வதற்கான கால ஆராய்ச்சியும், இட ஆராய்ச்சியுந்தான். இத்தகைய தலைவர்களை நோக்கிக் கைகாட்டும் குட்டித் தலைவர்களைப் பற்றியோ,

குறும்புப் பேச்சுக் காரர்களைப் பற்றியோ நமக்குக் கவலையில்லை. அவர்களுடைய அறிவின் மேலும் நம்பிக்கையின் மேலும் அவர்களுக்கிருக்கும் அழுத்தமான பிடிப்புப் போலவே நமக்கும் நம் அறிவின் மேலும் நம்பிக்கையின் மேலும் வலிந்த இரும்புப் பிடி உண்டு. 'பிரிவினை' என்ற சொல்லைச் சொல்லவும் அஞ்சுவதையும், அவ்வாறு அஞ்சுவதை 'அரசியல் விரகு' என்பதையும் நம்புகின்றவர்கள் மேலும் நம்பிக் கொண்டிருக்கட்டும். நம்பாமல் போகிறவர்கள் தனித்துப் போனால்தான் என்ன? கூட்டமாகப் போனால்தான் என்ன? இந்நிலையை இவர்கள் அணுகின்ற முறைக்கும், தமிழகத்தை இந்திராகாந்தி அணுகு கின்ற முறைக்கும் எள்ளளவும் வேறுபாடு இருப்பதாக நமக்குப் படவில்லை.

நமக்கு இரண்டில் ஒன்று தெரிய வேண்டும். ஆண்டாண்டுக் காலமாய் அடிமைப் பட்டுக்கிடக்கும் தமிழனுக்கு விடுதலை தேடித் தருவது யார் – அல்லது எப்படி என்பதன்று இப்பொழுதுள்ள சிக்கல். எப்பொழுது – என்பதுதான், இப்பொழுதுள்ள கேள்வி. இந்நிலையில நான் என்று வந்து எவரேனும் தலைமைப் பட்டயம் சாற்றிக் கொள்ளட்டும்; அல்லது தளபதிப்பட்டம் சூட்டிக் கொள்ளட்டும். நமக்குக் கவலையில்லை. நமக்குள்ள கவலையெல்லாம், இந்தத் தலைமுறையிலேயே–இந்த நூற்றாண்டிற்குள்ளேயே-நம்மையெல்லாம் தட்டியெழுப்பிய பெரியார் காலத்திலேயே – நமக்கெல்லாம் மொழி உணர்வும் தமிழ் வரலாறும் ஊட்டிய பாவாணர் காலத்திலேயே – நாம் விடுதலை பெற்றாக வேண்டும். அண்ணா தளபதியாக இருந்து முன் நடத்துவார் என்று நம்பியிருந்தோம். அண்ணா தம்மையே தாம் காத்துக்கொள்ள முடியாமல் தலை சாய்ந்தார்; அவரின் தம்பிகளா கிலும் நம்மை வழி நடத்துவார்கள் என்று நம்பினோம். அவர்கள் தம் கைகளையும் கால்களையும் வலுப்படுத்திக் கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பதாகத் தெரிகின்றது. அவர்கள் மேல் சாட்டப் பெற்ற அரசியல் குற்றச்சாட்டுகளுக் கிடையில், விடுதலை – பிரிவினை என்ற சொற்களைப் பலுக்குவதற்குக் கூட அவர்களுக்குத் திறமை யிருக்குமோ? இருக்காதோ? நமக்கெல்லாம் உணர்வு கொளுத்திய பெரியாரோ கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தைப் பேசிப் பேசியே வீணடித்து விட்டதாக நாம் கருதவேண்டியுள்ளது. 'கத்தியை வைத்துக்கொள்; பயன்படுத்தாதே' – என்ற அவரின் அறநிலைப் போக்கிற்கு – 'தர்மோபதேசத்திற்கு' – எதிராளிகளில் எவனும் தலை சாய்த்ததாய்த் தெரியவில்லை. அவருடைய கட்டளை இன்று வரும் நாளை வரும் என்றெல்லாம் இனியும் ஏமாறிக் கொண்டிருப்பதற்கு நமக்கு அகவையில்லை; உடலும் உணர்வும் முதுமையுற்றுவிடும் போல் தெரிகின்றது. அதற்குப்பின் பெரியாரைப்போல் பிறரை நம்பித்தான் காலந்தள்ள வேண்டும் என்ற கட்டாயம் நமக்கு வந்து விடும் போல் தோன்றுகின்றது!

அண்மையில் கோவைத் தொழிலறிஞர் – அறிவியல் முனைவர் கோ. து. நாயுடு அவர்களிடம் நேரில் போய், அவர் வைத்திருக்கும் வலிவுகளில் ஒரு பகுதியையாகிலும் – அறிவியல் கருவிகளை யாகிலும் எங்கட்குத் துணையாகத் தாருங்கள் என்று கேட்டுப்பார்த்து

விட்டேன். அவ்வாறு கொடுக்காமற்போனால் எதிர்காலத்தில் அவர்கள் போன்றவர்களிடமே முதன் முதல் போராட வேண்டியிருக்கும் என்றும், அவர்களின் குவிந்த செலவங்களையே முதன் முதலில் கரைக்க முற்பட வேண்டியிருக்கும் என்று நேருக்கு நேர் அச்சுறுத்திப் பார்த்து விட்டேன். அவர் நம் விடுதலைக் கொள்கையை முழுக்க முழுக்க வரவேற்றாராயினும், நம் உணர்ச்சியையும் முயற்சியையும் ஓர் ஐந்தாண்டுக் காலத்திற்குத் தள்ளிப்போடும் படி கேட்டுக்கொண்டார். அவ்வைந்தாண்டுக் காலத்திற்குள் நாம் விடுதலை கோருவதற்கான நோக்கங்கள் நிறைவு செய்யப் பெறுமற் போகுமானால், தாமும் நாம் தொடங்க விருக்கும் போராட்டத்தில் கலந்து கொள்வதாகக் கூறினார். அவ்வாறு கூறுவதை எழுத்தால் நான் சொல்லுகிற படி ஓர் ஒப்பந்தமா எழுதிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அவரும் ஒப்புக் கொண்டு என்னை எழுதச்சொன்னார். நான் எழுதியது இது: (தமிழிலும் ஆங்கிலத்திலும்! ஆங்கிலப் பெயர்ப்பு பாவலர் திரு. மகிழரசனுடையது).

கோவைத் தொழிலியற் பேரறிஞரும் அறிவியல் முனைவரும் ஆகிய கோ. துரைசாமி (நாயுடு) அவர்கள் தென்மொழி ஆசிரியா திரு. பெருஞ்சித்திரனருக்கு எழுதிக் கொடுத்த விடுதலை எழுச்சி நாள் கால நீட்டிப்பு ஒப்பந்த விளக்கம்.

தி. பி. 2003 கும்பம் உஉ. கி. பி. 1972 மார்ச்சு 6-ஆம் நாள் திங்கட்கிழமை, கோவை கோ. து. நாயுடு (G. D. Naidu) ஆகிய நான் கடலூர் தென்மொழியிதழ் ஆசிரியர் திரு. பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு, இவ்வொப்பந்த வரைவின் வழி, அவர் மிக அண்மையில் தொடக்கவிருக்கும் இந்திய ஆட்சியின் அரசியல், இன, மொழி, சட்ட அமைப்புகளினின்று முற்றும் வேறுபட்ட தமிழகத் தனி ஆட்சியமைப்புப் போராட்டத்தை இவ்வொப்பந்த நாளினின்று அடுத்த ஐந்தாண்டுக் காலத்திற்குத் தள்ளிப் போட வேண்டும் என்று வேண்டிக் கொள்வதுடன், அவ் வைந்தாண்டுக் கால எல்லைக்குள் அவர் எதிர்பார்க்கும் தமிழ் நாட்டு விடுதலை, "ஏதோ ஒரு வகையில்" கிடைக்கத் தவறுமானால் அவருடன் கையோடு கையும் தோளோடு தோளுமாக இணைந்து நிற்பதோடு நானே, முன்னின்று அவர் கொள்கையை நிறைவேற்றும் வகையில் ஒரு கருவிப்புரட்சிப் போராட்டத்தைக் கட்டாயம் தொடங்குவேன் என்று உறுதியளிக்கின்றேன்.

Agreement by Thiru. G. Duraiswamy Naidu the eminent Industiralist and the foremost Scientist, Coimbatore pledged to Thiru. Perunchittiranar, Editor, Thenmozhi, Cuddalore bidding extension of period for the Tamil Nadu Freedom upheaval :-

I. G. Duraiswamy Naidu, Coimbatore request Thiru. Perunchittiranar, Editor, Thenmozhi, Cuddalore, on this day of 23rd Kumbam Thi. Pi. 2003 (Monday the Sixth of March 1972) Through this statement of Agreement, to postpone his new-proposed struggle to be started in the closer days demanding an Independant set-up of "Free Tamil Nadu Government" that entirely differs from the political, racial, linguistic and legal constitution of the Government of India, from this day of the Agreement to a period of next five years and that, in case the said Freedom of Tamil Nadu as he expected is not achieved in any way, within that stipulated period of five years, I pledge and agree to join him arm with arm and shoulder with shoulder, and to initiate and come forth for an armed revolution in the cause of fulfilling his aims to liberate Tamil Nadu, without fail.

ஆனால், எழுதியபின் அவர் தாம் அதிற் பின்னால் கையெழுத்திட்டு அனுப்புவதாகக் கூறி, நான் ஒப்பந்த அடிப்படையில் எழுதிய உறுதிப்பாட்டை மடல் அடிப்படையில் சுருக்கி எனக்கு விடுத்து வைத்தார். அம்மடலை இவ்விதழ் அட்டை மேற்புறத்தில் வெளியிட்டுள்ளேன். நானும் கோவை, கோ. து. நாயுடு அவர்களும் செய்து கொண்ட இவ்வொப்பந்தத்தின் போது தென்மொழி விடுதலை அரிமாக்களில் சிலரும் என்னுடன் வந்திருந்தனர். (சட்ட நெரிசல்களைக் கருதி அவர்கள் பெயர்களை இங்கு வெளியிடவில்லை. தேவையாகும் பொழுது அவர்களை வெளிப்படையாகப் பாராட்டுவேன்). திரு. கோ. து. நாயுடு அவர்கள் 'எப்படிப்பட்டவர்' என்பதை – என்னை அவர் அறிந்ததை விட – நான் நன்கு அறிவேன். எனவே அவர் போன்றவர்கள் நம் தமிழகப் போராட்டத்தில் ஒதுங்கியிருந்து விட முடியாது. பெரியார் ஈ. வே. இரா. அவர்கள் தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையைத் தமிழக அரசினர் சார்பாக நிறுத்தி வைத்துள்ளதாகச் செய்தித் தாள்களில் பார்க்க நேர்ந்தது. தி. மு. க. தலைவர்களில் ஒருவரும் முன்னணிக் கொள்கையாளருமாகிய திரு. மனோகரன் அவர்கள் தம் கட்சி நாட்டுப் பிரிவினையைக் குழி தோண்டிப் புதைத்து விட்டதாகப் பேசியதையும் படிக்க நேர்ந்தது. இச்செய்தி எவ்வளவில் உண்மையோ நமக்குத் தெரியாது. அப்படியே உண்மையாக இருந்தாலும் 'இஃதெல்லாம் ஓர் அரசியல் தந்திரம்' என்று அடங்கிப் போகவும் முடியாது. அப்படித் தேற்றிக்கொண்டு நம்பிக் கிடப்பவர்களைப் பற்றியும் நமக்குக் கவலையில்லை. திரு மனோகரனைப் பொறுத்தவரை தமிழகப் பிரிவினை தேவையில்லாமல் இருக்கலாம்; ஏனெனில் அவர் ஒரு மலையாளி; அல்லது திரு. கோ. து. நாயுடு அவர்களைப் பொறுத்தவரை தமிழகப் பிரிவினை தற்காலிகமாகவோ, நிலையானதாகவோ தள்ளிப்போடக் கூடியதாகவோ – தள்ளி விடக் கூடியதாகவோ (அவர்க்குத் தனிப்பட்ட நிலையில் நன்மை வருகிற

பொழுது) இருக்கலாம்; ஏனெனில் அவரும் ஒரு தெலுங்கர். அப்படியே தான் பெரியாரையும் கருதிக் கொள்ள வேண்டியிருக்குமா என்பது தான் நமக்குத் தெரியவில்லை. அவரைப் பொறுத்தவரை, அவர் ஒரு கன்னடியர் என்பதையும் மறந்து, இந்தத் தமிழர்களுக்காக, தமிழரோடு தமிழராய் ஓர் அரை நூற்றாண்டுக் காலம், உரிமையுணர்வுக்கு எருவிட்டும், விடுதலை எழுச்சி தழைக்கவும் பாடுபட்டாரே, அவரையும் அப்படித்தான் கருதிக்கொள்ள வேண்டியிருக்குமோ என்பதை அவர்தான் நமக்கு விண்டு விளக்க வேண்டும்.

எவரோ, எப்படியோ, இனியும் நாம் சாக்குப் போக்குகள் காட்டிக் காலத்தை நீட்டிப் போட்டுக் கொண்டிருக்கத் தேவையில்லை; அப்படியிருக்கக் கூடவும் கூடாது. வடநாட்டினரின் வல்லாட்சி – ஒருசார்பு அதிகார உரிமை – தமிழர்களையும், தமிழர்தம் பண்பாட்டு வளங்களையும் பூண்டோடு அழித்து, அவர்களை என்றென்றும், மொழி, இன, பொருளியல், அரசியல் அடிமைகளாக அழுத்திவைத்துக் கொண்டிருக்கும் கரவு சான்றது. அதற்குத்தக சட்டங்கள் மாற்றி அமைக்கப் பெறுகின்றன; அரசியல் நடை முறைகள் தலைகீழாக்கப் படுகின்றன; நிலக் கூறுபாடுகள் பூசி மெழுகப் படுகின்றன. இவற்றின் இடிபாடுகளுக் கிடையில் அவர்களின் மொழி, இன, பண்பாடுகள் விரிவு படுத்தப் பெறுகின்றன; அவர்களின் வரலாறுகள் திருத்தி எழுதி வைக்கப் பெறுகின்றன. அறிவும் அக நோக்கும் அற்ற அவர்களைச் சேர்ந்த புல்லியர்களெல்லாரும் நாம் வணங்கத்தகுந்த தலைவர்களாக, வழிகாட்டிகளாக வந்து அமர்ந்து கொள்கின்றனர். நம் இன வழிகாட்டிகளும், நம்மின் பழம்பெரும் அறிஞர்களும் அவர்களுக்குக் கோமாளிகளாகவும், வாயில் காப்போர்களாகவுமே பயன்படுத்தப் பெறுகின்றனர். இந்நிலைகளை நன்கு உணராத அறிவு முண்டங்களாகிய பக்தவத்சல, சுப்பிரமணியன்கள் தம் மண்டைப் புழுக்குடைச்சலினால் ஏற்படும் உளறல்களை யெல்லாம் நாம் 'அறிவுரை' என்று ஏற்கத் தேவையில்லை. காமராசர் போலும் ஓரிரு பேராயக் கட்சித்தலைவர்கள் உண்மையிலேயே மக்கள் நலம் விரும்பிகள் என்றால், தாங்கள் தமிழகப் பிரிவினையை வலியுறுத்துவதைத்தவிர வேறு முயற்சிகளில் தங்களைக் கொண்டு செலுத்த வேண்டா என்று எச்சரிக்கின்றோம். ஒரு பெரும் அரசியல் மறுமலர்ச்சி வரலாறு உருவாவதை எந்தத் தலைவனோ தொண்டனோ தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை மட்டும் உறுதியாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். காலத்தின் விளைவு இது என்று ஏற்றுக்கொள்ள வேண்டுமேயல்லாமல் எந்த எதிர்விளைவுக்கும் முயற்சி செய்து வரலாற்று வெள்ளத்தில் முழ்கிப் போக வேண்டா என்று எதிரது உணரும் ஆற்றல் உள்ளவர்களையும் வேண்டிக்கொள்கின்றோம்.



செய்திகள்

தனித்தமிழ் நாடகம் - பெங்களூர்.

கடந்த கும்பம். அ (20—2—72) அன்று பெங்களூர் தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் 'எந்நாளோ' எனும் தனித்தமிழ்க் குமுக நாடகம் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் நடைபெற்றது. நாடகந் தொடங்குவதற்கு முன் பாவலர் திரு. ம. இலெ. தங்கப்பா, கைகாட்டி ஆசிரியர் திரு. மு. தமிழ்க்குடிமகன், பாவலர் திரு. மகிபை. பாவிசைக்கோ ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். நாடக முடிவில் தலைவர் நாடகவாசிரியர் அறவாழி அவர்களையும், நாடகத்தில் கதைத்தலைவன் வேங்கையாக நடித்த திரு. மணி அவர்களின் நடிப் பாற்றலையும், உரையாற்றலையும் மிகவும் பாராட்டிப் பேசியதுடன் நாடகத்தில் பங்கு கொண்ட பிற நடிக நடிகையர்களையும் பாராட்டி, இந்நாடகம் தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் நடத்தப்பெற வேண்டுமென்றும், அதற்கு ஆங்காங்குள்ள தனித்தமிழ்க் கழகங் களும், உ. த. க. போன்ற அமைப்புகளும் ஏற்பாடு செய்ய வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டார்.

அழகப்பர் தமிழ்மன்ற விழா - காரைக்குடி.

கடந்த கும்பம். கரு (25—2—72) அன்று, காரைக்குடி, அழகப்பர் தமிழ் மன்றம் (அனைத்துக் கல்லூரிகள் வட்டம்) சார்பில் ஆண்டு விழா பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் நடந்தது. அன்று காலை 8 மணியளவில் தொடர்வண்டி நிலையத்தில் 500, 600 மாணவர்கள் கூடியிருந்து ஆசிரியர் அவர்களைப் பலவாறான வாழ்த் தொலி யெழுப்பி மகிழ்ச்சி யாரவாரத்துடன் வரவேற்று அரைக்கல் தொலைவில் உள்ள கல்லூரிக்கு வீறு நடையுடன் அழைத்துச் சென் றனர். வழி நெடுக வேட்டொலிகள் எழுப்பப் பெற்றன; கலைக் கல்லூரி வாயிலிலிருந்து சாலைகள் எங்கும் ஆசிரியரை வரவேற்கும் வளைவுகள் நிறுத்தப் பெற்றிருந்தன. அன்று காலை 10-30 மணியளவில் நடந்த விழாவிற்கு ஆசிரியர் அழைத்துச் செல்லப் பெறுகையில் மன்ற வாயிலிலிருந்து மேடை வரை நடை பாதை நெடுக மலர்களைத் தூவி மாணவர்கள் வரவேற்ற காட்சி உடலைப் புல்லரிக்கச் செய்தது. மன்றம் மாணவ மாணவியரால் நிரம்பி வழிந்தது. மன்றத்திற்கு வெளியில் உள்ள தாழ்வாரங் களிலும், மரங்களின் அடியிலும் மாணவர் கூட்டம் அமைதியாக இருந்து சொற்பொழிவைக் கேட்டது. வரவேற்புரைக்குப் பின் சட்டமன்ற உறுப்பினர், இந்தியெதிர்ப்பு மறவர் திரு. காளிமுத்து

அவர்கள் உரையாற்றினர். அதன்பின் பாவலரேறு அவர்கள் 2 மணிநேரம் நீண்டதோர் உரையாற்றினர். இச் சொற்பொழிவு மாணவர்களுக்குப் புத்துணர்வும் புதுத்தெம்பும் ஊட்டுவதாக இருந்த தாகவும், தமிழ் மன்றத்திற்கு மிகப்பெருமை கூட்டுவதாக விளங்கிய தாகவும் பேசப்பெற்றன. கூட்ட இறுதியில் தமிழ்மன்றம் நடத்திய மாநிலப் பரிசுப் போட்டிகளில் வென்றோர்க்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன. அன்று பிற்பகல் மூன்று மணியளவில் பாவலரேறு பெருஞ் சித்திரனார் அவர்களுக்குக் காரைக்குடி இராமசாமித் தமிழ்க்கல்லூரி முதல்வர் புலவர். திரு. இராமநாதன் கி. க. தே. அவர்களால் ஒரு வரவேற்பு கொடுக்கப் பெற்றது. அவ்விழாவில் கூடியிருந்த மாணவ மாணவியர்களிடையில் ஆசிரியர் அவர்கள் மிக அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினர். இறுதியில் தேநீர் விருந்துடன் விழா இனிது முடிவுற்றது.

அன்று மாலை 7 மணியளவில் காரைக்குடித் தமிழியக்கப் பாசறைச் சார்பில் புதுவை. திரு. அரிமா. வளங்கோ தலைமையில் தமிழக விடுதலை ஆய்வுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. கூட்டத் தில் பாவலரேறு பெருஞ்சித்திரனர், பாவலர் மகிழரசன், திரு. அரிமா. மகிழ்கோ முதலியோர் பேசினர். பலவகையான கருத்தறிவிப்புக்குப் பின் பாசறைக்கூட்டம் இரவு 9 மணியளவில் முடிவுற்றது. பாசறைக் கூட்டத்திற்கும், அழகப்பர் கல்லூரி மன்றச் சிறப்புக் கூட்டத் திற்கும் பாசறை மறவர்கள் அனைவரும், குறிப்பாக மன்றச் செயலர் திரு கோ. திருநாவுக்கரசு அவர்களும் திரு. இரா. பாவாணன் அவர் களும் எடுத்துக்கொண்ட முயற்சியும் உழைப்பும் பெரிதும் பாராட்டத் தக்கன.

உ. த. க. கோவை நகரக்கிளைக் கூட்டம்.

கும்பம் ௧௧ (2—3—72) அன்று மாலை 6-30 மணி அளவில் கோவை உ.த.க. நகரக்கிளைச் சார்பில் செயலர் திரு. நித்தலின்பனர் வீட்டில், நகர திராவிடர் கழகத் தலைவர் திரு. மணவழகனர் (கசுத்தூரி) வழக்கறிஞர் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடை பெற்றது. கூட்டத்தில் பாவலரேறு பெருஞ்சித்திரனர் அவர்கள் சிறப்புச் சொற்பொழி வாற்றினர். கூட்டத்திற்குப் பல குறிப்பிடத் தக்க பேராசிரியர்கள் சிலரும் மாணவர்களும் வந்திருந்து சிறப்புச் செய்தனர். உறுப்பினர்கள் பெரும்பாலார் வந்திருந்தனர். கூட்டம் இரவு 10 மணிவரை நடைபெற்றது.

திருவள்ளுவர் மன்ற மூன்றும் ஆண்டு விழா. நீலமலை மாவட்ட உ. த. க. பெகும்பகல்லாக் கிளை.

கும்பம் உம் (3–3–72) அன்று மாலை 6 மணியளவில் நீலமலை, பெகும்பகல்லா திரைப்பட அரங்கத்தில் மேற்படி விழாக் கூட்டம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்திற்கு நீலமலை மாவட்ட உ. த. க. அமைப்பாளர் புலவர் திரு. ந. நீலமலை நம்பி தலைமையேற்றார். அன்று பிற்பகல் நடந்த மாணவர்களுக்கான பாட்டு, பேச்சு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன. பாவலரேறு பெருஞ்சித்திரனார், 'எதிர்கால உலகிற்குத் தமிழ் தரப்போவதென்ன?' என்னுந் தலைப்பில் சிறந்ததொரு சொற்பொழிவு நிகழ்த்தினார். 'திருக்குறளும் பகுத்தறிவும்' என்ற தலைப்பில் வழக்கறிஞர் இரா. மணவழகனார் அவர்களும் பாவலர் திரு. மகிழரசன் அவர்களும் உரையாற்றினர்கள். இரவு 10-30 மணியளவில் கூட்டம் இனிதே முடிவுற்றது.

த. நா. மின்வாரியப் பகுத்தறிவாளர் கழகக் கிளைத் தொடக்க விழாப் பொதுக் கூட்டம்.

கும்பம் உஉ (5—3—72) அன்று காலை 10 மணியளவில் நீலமலை மஞ்சூர் சந்தைத் திடலில், த. நா. மி. வா. பகுத்தறிவாளர் கழகம், குந்தாக்கிளைத் தலைவர் மருத்துவ அதிகாரி திரு. ச. வடிவேலனார் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'அறிவு, பகுத்தறிவு' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். மற்றும் கோவை மாவட்டத் தி.க. தலைவர், வழக்கறிஞர் திரு. இரா. மணவழகனார் அவர்கள், பாவலர். திரு. மகிழரசன் அவர்கள். திருவாளர்கள் தாரை. குஞ்சு, இளங்கோவன், இளமாறன் முதலியோர் சொற்பொழிவாற்றினர். பகல் 1 மணியளவில் கூட்டம் முடிவுற்றது.

சென்னை, கிண்டிப் பொறியியற் கல்லூரித் தமிழ்மன்ற நிறைவு விழா.

மீனம் க (22—3—72) அன்று மாலை 4-30 மணியளவில் கிண்டிப் பொறியியற் கல்லூரித் தமிழ்மன்றத்தின் நிறைவு விழா பேரா. கோ. ஏகாம்பரம் தலைமையில் நடைபெற்றது. விழாத்தொடக்கத்தில் திருக்குறள் பெருமாள் அவர்கள் பாவேந்தர் பாரதிதாசனார்

பாடல்களைப் பாடி உரையாற்றினர். அடுத்து, தென்மொழியாசிரியர் பெருஞ்சித்திரனர் தமிழ்மொழியின் சிறப்பியல்கள் சொல்லியல்கள் பற்றியும், ஆரியர் தமிழரை அடிமைப் படுத்திய முறைகள் பற்றியும், திருக்குறள் எழுந்த நோக்கம் பற்றியும் விரிவாக மூன்று மணி நேரம் அரியதோர் உரையாற்றினர். கூட்டத்தின் இறுதியில் தமிழ் மன்றப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன. இரவு 8-30 மணியளவில் கூட்டம் சிறப்பாக முடிவுற்றது. 0

---

0 பொய்யர் புனைந்த வரலாற்று மண்டபங்கள் தவிடு பொடி யாகின்றன!

0 ஒப்பாரும் மிக்காரு மற்ற மொழிப் பேரறிஞர் தேவநேயப் பாவாணர் தம் நுண்மாண் நுழை புல வன்மையினுல் சமைக்கும் தமிழர்தம் மெய்வரலாற்று மாளிகைகள் இனி ஒளி வீசித் திகழப் போகின்றன!

0 மாந்தவியல் முடிபுகளும், மொழியியல் முடிபுகளும், இலக்கண இலக்கிய அகப்புறச் சான்றுகளும் கொண்டு உருவாக்கிய பண்டை வரலாற்றுக் கருவூலம்.

0 தமிழர் தம் கைகளில் மிளிரவேண்டிய நூற்செல்வம்!

தமிழர் வரலாறு

ஆசிரியர்

மொழிஞாயிறு : ஞா. தேவநேயப்பாவாணர், க. மு.

வெளிவந்து விட்டது : விலை உருபா : 10-00.

(பதிவஞ்சலில் வேண்டுவார் 3 உருபா சேர்த்து விடுக்க.)

கிடைக்குமிடம்

தே. மணி

ஆ-1135-2-ஆம் மேற்குக் குறுக்குச் சாலை,

காட்டுப்பாடி விரிவு (அஞ்); வ. ஆ. மாவட்டம்.

நன்றியறிவும், நன்கொடைப் பட்டியலும்.

(இந்தி எதிர்ப்பு மறவர் உயர்திரு ஈழத்தடிகளின் அன்பு மடல் இது)

பேரன்புடையீர்! வணக்கம்.

முதற்கண், என் உளங்கனிந்த நன்றியை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். 'தென்மொழி' வாயிலாக எனது இன்றைய இரங்கத்தக்க நிலையை உணர்ந்த அன்பர்கள், தங்களின் வேண்டுகோளை மதித்து எனக்கு உதவ முன் வந்துள்ளனர். மேலும், உதவி கிடைக்குமென எதிர்பார்க்கிறேன்.

இதனுடன் இணைத்துள்ள பட்டியலைத் தங்கள் மேலான இதழில் வெளியிட்டு, எனது இருண்ட வாழ்வில் ஒளி ஏற்பட வழி செய்து தாருங்கள். தங்களின் செயற்கரிய பேருதவியை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன். தங்களை நேரிற்கண்டு எனது இன்றைய நிலையை விளக்கிக் கூறமுடியாத நிலையில் நோய்வாய்ப்பட்டு நடமாடமுடியாமல் இருக்கிறேன்.

மற்றவை தங்கள் அன்புமடல் பார்த்து.

இங்ஙனம் நன்றிமறவாத
அடிகள்

குறிப்பு :- திங்கள்தோறும் எனக்குத் 'தென்மொழி' அனுப்பும்படி தங்கள் உதவியாளரிடம் கூறவும்.

அடிகளுக்கு அன்பளிப்பு அளித்த அன்பர்களின் பட்டியல்.

		தொகை
1.	உயர்திரு மறை திருநாவுக்கரசு அவர்கள்	5—00
2.	,, கி. ஆ. பெ. விசுவநாதன் ,, ...	10—00
3.	புன்செய்ப் புளியம்பட்டி மறைமலை அடிகள் மன்றத்தினர் ...	100—00
4.	உயர்திரு வி.ப.க. மூர்த்தி, பாபநாசம் அவர்கள் ...	1—00
5.	தில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பர். சாலை இளந்திரையன் அவர்கள் ...	50—00
6.	உயர்திரு எம்.ஆர். கண்ணன், ச.ம.உ. அவர்கள் ...	50—00
7.	,, காஞ்சி மணிமொழியார் அவர்கள் ...	25—00
8.	,, கி. மாரியப்பன் அவர்கள், பொள்ளாச்சி ...	15—00
9.	,, ந. முத்துக்குமரன் அவர்கள், பல்லடம் ...	10—00

10.	உயர்திரு. கோ. து. நாயுடு அவர்கள், கோவை	...	100—00
11.	உயிர்முறிக் குழுமப் (L. I. C.) பணியாளர்கள், தஞ்சாவூர்	....	100—00
12.	நீடாமங்கலம் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள்	...	17—00
13.	உயர்திரு தில்லை வில்லாளன், க.மு; ச இ; பா.உ.	...	60—00
14.	இளைஞர் அணியினர், கரியா கவுண்டனூர், வடக்கலூர் (அஞ்சல்) அன்னூர், கோவை	...	10—00
15.	புதுச்சேரி மாண்புமிகு முதலமைச்சர் பரூக் அவர்கள்	...	200—00
16.	,, ,, உள்துறையமைச்சர் எசு. இராமசாமி	...	50—00
17.	,, ,, கல்வியமைச்சர் எசு. ஆறுமுகம்	...	50—00
18.	,, ,, பொதுப்பணியமைச்சர் த. இரா. இராமச்சந்திரன் அவர்கள்	...	50—00
19.	,, உயர்திரு ச. சிவப்பிரகாசம் உதவி மேயர், புதுச்சேரி	....	50—00
20.	திரு ப. இராசு அவர்கள், புதுச்சேரி	...	25—00
21.	,, சு. கோவிந்தன் அவர்கள் ,,	...	25—00
22.	,, செ. முத்து ச.ம.உ. அவர்கள், புதுச்சேரி	...	25—00
23.	,, துரை. சுப்பிரமணியன் அவர்கள், புதுச்சேரி	...	25—00
24.	,, அப்சரா தங்கவேலன் அவர்கள், புதுச்சேரி	...	10—00
25.	,, எம். மணியன் அவர்கள், புதுச்சேரி	...	10—00
26.	,, வி.வி. சாமி அவர்கள், ஓட்டல் பூம்புகார், ,,	....	10—00
27.	,, இரா. கல்யாணசுந்தரம் அவர்கள், ,,	...	10—00
28.	,, செ. கோவிந்தராசன் ச.ம.உ. அவர்கள், ,,	...	10—00
29.	,, சீத்தா. வேதநாயகம் அவர்கள், ,,	....	10—00
30.	,, ப. பெருமாள் அவர்கள், புதுச்சேரி	....	5—00
31.	,, தே. செல்வராசு அவர்கள், ,,	...	5—00
32.	,, கே. ஏ. சலீல் அவர்கள், ,,	...	25—00
33.	,, பி.கே. வீரராகவன் அவர்கள், புதுச்சேரி	...	25—00
34.	,, க. தங்கவேல், ச ம.உ. அவர்கள், ,,	...	10—00
35.	,, எம். எசு. வேங்கடேசன் அவர்கள், ,,	...	5—00
36.	,, வி. இராமலிங்கம் அவர்கள், ,,	...	5—00

மலையகத்தினின்று ஒரு மடல்...!

பேரன்புள்ள பாவலரேறு அவர்களுக்கு

வணக்கம் ....

'அரசியல்' இதழ் நடத்த நடுவணரசு இசைவு தர மறுப்பது குறித்து மனம் நொந்தேன். வங்கத்தின் விடுதலைக்கு வழி வகுத்த இந்தியா-பாரதம்-தமிழ் நாட்டின் விடுதலைக்கு நாட்களை எண்ணிக் கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது. இன்றைய [14—2—72] தமிழ் நேசன் (மலேசியா) நாளிதழில் தமிழக அமைச்சர்களின் தன்னாட்சிக் கோரிக்கைப் பேச்சைப் படித்தேன். என்னே அவர்களின் அச்சங்கொள்ளித்தனம்! "'இந்தி' இந்தியாவின் ஆட்சி மொழியென்றால் தமிழ் நாடு தனி நாடாய் மிளிரும்" —என்று உரிமைக் குரல் கொடுக்க என்ன தயக்கம்? உறவுக்குக் கை கொடுப்பார்களாம்; உரிமைக்குக் குரல் கொடுப்பார்களாம். இந்தி இந்தியாவின் ஆட்சி மொழி என்றால் நாம் உதை அன்றோ கொடுக்க வேண்டும்.........

......மலேசியத் தமிழர்கள் தமிழ் நாட்டில் இருப்பார்களேயானால் இந்நேரம் .. ...தலைவர்கள் சிலரின் தலைகள் காணாமல் அன்றோ போயிருக்கும். 'கொலை வாளினை எடடா, சில கொடியோர் செயல்அறவே' என்ற பாரதிதாசன் பாடல் நினைவுக்கு வரவில்லையா? தமிழ் நாட்டில் உண்மைத் தமிழர்கள் வாழவில்லை என்பது எங்களுக்கு விளங்குகின்றது. அங்கே ஆண்டே போலும் கன்னடர்களும், ஆரியர்களும். தெலுங்கர்களும், மலையாளிகளும், வடவர்களும் மிகுதியாக வாழ்கிறார்கள். தமிழ் நாட்டில் தமிழன் சிறுபான்மையாக வாழ்கிறான். பணத்துக்காக 'மூல்லை' மாறுகிறான். தமிழகச் சுற்றுச் செலவு வந்த என் நண்பர் கூறிய கருத்துக்கள்தாம் நான் மேலே குறிப்பிட்டவை. தமிழ் நாட்டுச் சாலைகளுக்குத் தமிழில் பெயரில்லை. அஞ்சல் நிலையங்களில் ஆங்கிலமும் இந்தியும் கொடிகட்டிப் பறக்கின்றன வணிக நிலையங்களில் தமிழ் கொலை செய்யப்பட்டுக் கிடக்கிறது. தாய்மொழி தமிழைப் பற்றித் தமிழர்கள் கவலைப் படுவதாகத் தெரியவில்லை. வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழர்களிடம் காணப்பெறும் தமிழ்ப் பற்றும், உணர்வும் தமிழ் நாட்டவர்க்கு என்று வருமோ? மலேசியாவுக்கு வருகை தந்த (தமிழக அமைச்சர்) என். வி. நடராசன், மற்றோர் எழுத்தாளர் இருவரிடமும் தென்மொழி பற்றிக் கேட்ட பொழுது 'அப்படி ஒரு தமிழ் ஏடு இல்லை' என்று கூறினார்கள். மாணவர் தலைவர் சனார்த்தனமும், 'படித்ததில்லை' என்

ரூர்: மலேசியத் தமிழர்கள் 'தென்மொழி' பற்றி (தமிழகத்தில் உள்ள பொறுப்பானவர்களிடம்) கேட்டால் தெரியாது என்று கூறும் அளவு தமிழ் நாட்டில் அரசியல் வளர்ந்துள்ளது. இழிவு...! கிட்டத்தட்ட ஆறு, ஏழு ஆண்டுகளாகத் தென்மொழி படித்து வரும் என்போன்ற வர்களுக்கு உள்ளம் கொதிக்கிறது. மனம் நொந்து இம் மடலை வரை கின்றேன். தாங்கள் இந்நாட்டிற்கும் சிங்கட்பூருக்கும் வருகைதருமாறு விழைகின்றேன். பண்டாரகர் சி இலக்குவனர் அவர்களிடமும் சொல்லி அனுப்பியுள்ளோம். தங்களின் வருகை மூலம் தென்மொழி வளரும்......

இங்ஙன்,
அரு. இராமசாமி, சிரம்பான் (மலேசியா)

மகப்பேற்றுக்கு அன்பளிப்பு.

தென்மொழி அன்பர்கள் திருவண்ணாமலை-வாணுபுரம் புலவர் அ. தங்கவேலு-திருவாட்டி கற்பகம் அம்மையார் ஆகியோர்க்கு கடந்த கும்பம் அ-ஆம் நாள் [20-2-72] ஆண்மகவு பிறந்து அதற்குப் புகழேந்தி என்று பெயர் சூட்டியதன் நினைவாகக் விடுக்கப்பெற்ற நன்கொடை உருபாய் ஐந்தை நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் பிள்ளையும் பெற்றோரும் நீடுவாழி!

அமைச்சர்.

திருமண நன்கொடை

பல்லடம் தென்மொழி அன்பர்கள் புலவர் ந. முத்துக்குமரனாரும் புலவர் சி. சேதுகா அம்மையாரும் தமக்குக் கும்பம் 22-ம் பக்கம் (5—3—72) நிகழ்ந்த திருமண விழாவின் நினைவாகத் தென்மொழிக்கு உருபா இருநூறு மனங்கனிந்து நன்கொடையாக அனுப்பியுள்ளனர்.

அவர்தம் தொண்டுள்ளத்திற்கு நன்றி கூறியும்; 'யாண்டுள தமிழ் நலம், ஆண்டுள எம் உளம்' எனப்பெருமிதம் கொள்ளும், அன்னார் வேண்டுவன அடைந்து நீண்ட நாள் வாழ்கவென வேட்குறு நெஞ்சொடு வாழ்த்தியும் மகிழ்வுறுகிறோம்.

அமைச்சர்

சோமச்சாறு எடுக்கப் பயன்பட்ட காளான்.

வழக்கறிஞர்: பி. இராமநாதன் க. இ; ச. இ.

1. ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்தது கி. மு. 1500ஐ ஒட்டி யாகும். ஆரியர் வேதங்களில் மிகப் பழைமையானது இரிக்கு வேதம். அது கி. மு. 500-ஐ ஒட்டித் தொகுக்கப்பெற்றது. எனினும் அதில் ஆரியர் இந்தியாவிற்குள் நுழைந்த காலச் செய்திகளைக் குறிப்பிடுவனவும், கி. மு. 1200–ஐ ஒட்டி இயற்றப் பெற்றனவும் ஆன பாடல்களும் சேர்க்கப்பெற்றுள்ளன.

2. இரிக்கு வேதத்தில் சோமச் சாற்றைப் பெருமைப்படுத்தும் பாடல்கள் மிகப்பல. சுரா என்னும் மற்றொரு குடிவகையும் அதில் பாராட்டப் பெறுகிறது. சுரா என்பது 'பீர்' ஐப் போன்றது என்றும் மாவைப் புளிக்க வைத்துச் (Fermented drink) செய்யப்படுவது என்றும் அறிஞர்கள் முடிவு செய்து விட்டனர். ஆனால் சோமச்சாறு அபினைப் போன்று, பல்வேறு மயக்க எண்ணங்களைத் தரும் வெறியூட்ட வல்லது, (hallucinogen) என்பது இரிக்கு வேதத்திலிருந்து தெரிய வருகிறது. சோமச்சாறு எதிலிருந்து எடுக்கப்பட்டது என்று அண்மைக் காலம்வரை முடிவு செய்யப்படவில்லை. இது குறித்து அண்மையில் அறிஞர் வெளியிட்டுள்ள கருத்தை விளக்குவது இக்கட்டுரை.

3. இரிக்கு வேதத்தில் சோமச்சாறு ஏறத்தாழ ஆயிரம் இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுவே ஆரியர்க்கு ஒரு கடவுளுமாகும். சோமச்சாறு வணங்கப்படுவதைப் பல இடங்களில் காணலாம். (எடுத்துக் காட்டு:–)

இரிக்குவேதம் 8–ஆம் மண்டிலம்: 48–3.—

சோமச்சாற்றைக் குடித்து விட்டோம்
நாம்; சாவாநிலையடைந்து விட்டோம்;
ஒளியைக் கண்டனம்; கடவுளரையும்
கண்டனம்;
பகை இனி நமக்கு ஒரு பொருட்டன்று;
மாந்தர் நமக்குச் செய்யக்கூடிய தீங்கும்
ஒரு பொருட்டன்று;

ஓ! இறவாத சோமச்சாறே!
(சோமக் கடவுளே!) ¶

9ஆம் மண்டிலம்: 27—4-6.—

துய சோமச்சாறு (சோமக்கடவுள்) இங்கே
முழங்கியுள்ளது; அதுவே நமக்கு
மாடுகளைத் தருவது; பொன்னைத் தருவது;
அது முழுவெற்றி தருவது; யாரும்
அதை வெல்ல இயலாது.

வடிகட்டிய தூய சோமச்சாறு, மிகுந்த
வெறியூட்டும் சோமச்சாறு வானத்தில்
ஞாயிறுடன் சேர்ந்து ஓடுகிறது இங்கே.

பொன்னிறக் காளைபோல் கடும் வலியுடன்
அச்சாறு காற்றின் வழியாக இந்திரனிடம்
ஓடிச் சென்றுள்ளது. †

தொட்டி, தொட்டியாகச் சோமச்சாற்றைக் குடித்த பின்னரே இந்திரன் விருத்திரன் முதலியோருடன் போருக்குச் செல்கிறான்.

We have drunk the Soma, we are become
Immortals
We are arrived at the Light, we have
found the Gods
What now means hostility to us, what
the malice of mortal
O! immortal Soma!

† Here Cattle-winning Soma the Pure, gold-winning
Soma the pure has roared; the juice
completely victorious, invincible
Here he runs with the Sun, Soma the Pure
in heaven;an intoxicating
intoxication in the filter
Here with wild strength he has flowed
through the atmosphere, the
golden bull, flowing pure,
the Juice to Indra.

4. சோமச்சாறு எவ்வகைப் பூண்டு அல்லது செடியிலிருந்து எடுக்கப்பட்டது என்பது யாண்டும் இரிக்கு வேதத்தில் விளக்கப்படவில்லை. மரப்பலகைமேல் மாட்டுத்தோலைப் பரப்பி அதன்மேல் சோமச்சாறு தரும் பூண்டை (செடியை?) வைத்து நசுக்கிச் சாறெடுத்துப்பின் ஆட்டு மயிர்க் கம்பளத்தில் வடிகட்டி. பாலோ தயிரோ கலந்து குடிப்பர் என்று இரிக்கு வேதம் கூறுகிறது.

5. ஆர். கார்டன் வாசன் என்பவர் 1969-இல் வெளியிட்ட "சோமா, என்று முள கடவுட் காளான்" என்னும் நூலில் சோமச்சாறு "அமானிடா மசுக்காரியா [Amanita Muscaria (botonic name)-ஆங்கிலேயரால் Fly Agaric என அழைக்கப்படுவது] என்னும் காளான் வகையிலிருந்தே எடுக்கப்பட்டு இருக்க வேண்டும் என்று நிறுவுகிறார். ¶

6. அக்காளான் இன்றும் ஆரியரின் பண்டை வாழிடமாகிய தென்உருசியப்பகுதியை ஒட்டிய சைபீரியப் பகுதிகளில் தரைமட்டத்திலேயே வளருகிறது. பிர்ச் (Birch) மரங்களை ஒட்டி அது வளரும். நல்ல சிவப்பு நிறக் குடையை உடையது. ஆனால் தெற்கே வெப்ப மண்டலத்தை நோக்கி வர வர அக்காளான் மறைகிறது. ஆப்கானிசுத்தான் மலைப்பகுதிகளுக்குத் தெற்கில் அது காணப்படுவதில்லை. அங்கும் ஏறத்தாழ 8000 அடி உயரத்துக்கு மேலேயே காணப்படுகிறது.

¶ R.Gordon Wasson: "Soma, divine mushroom of immortality" (Ethno-mycological Studies No 1) பக்கங்கள் xiii, 381,நிறப்படங்கள் 24,நாட்டுப்படங்கள் 3. The Hague: Mouton; New York:Harcourt,Brace and World, Inc.1969.

இப்புத்தகத்தின் படிகள் 680 மட்டுமே அச்சிடப்பெற்றன. அதற்கான தாள் தனியாகக் கையால் செய்யப்பட்டது. தாள் செய்யும்பொழுதே ஒவ்வொரு தாளிலும் (உருபாத் தாளின் வெள்ளைப் பகுதியில் காணப்படுவது போன்ற) தனிவடிவம் (Water-mark)அழுத்து முறையில் பதிக்கப்பட்டுள்ளது. ஒரு படியின் விலை 200 டாலர் (86.50 பவுன்): அஃதாவது ஏறத்தாழ 1000 உருபாவுக்கு மேலாகும் இந்நூலின் கருத்துகளை வாசனே Journal of the American Oriental Society 91ஆம் மடலம் 2ஆம் பிரிவு (1971ஏப்ரல்-சூன்) பக்கங்கள் 169-186இல் உள்ளதன் கட்டுரையில் சுருங்கக் கூறியுள்ளார்.

சைபீரிய நாட்டுப் பழங்குடி மக்களால் தொன்று தொட்டு இன்று வரை அக்காளான் வெறியூட்டும் பொருளாகப் பயன் படுத்தப் படுகிறது. இரிக்கு வேதத்தில் யாண்டும் சோமச்செடியின் வேர், தண்டு, பூ, விதை ஆகிய உறுப்புகளைப் பற்றிக் கூறப்படவில்லை. எனவே அவ்வுறுப்புகள் எவையும் தனியாகப் பெற்றிராத அக்காளானிலிருந்தே சோமச்சாறு எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்கிறார் வாசன். "பிறவாத ஒற்றைக்காலன்" (அசா ஏகபாத் –Aja Ekapad– Not-born Uniped) என்று இருக்கு வேதம் குறிப்பிடும் கடவுள் இக்காளானாகவே இருத்தல் வேண்டும் என்கிறார்.

7. "அமானிடா மசுகாரியா" என்னும் வெறிக் காளானின் தனிச்சிறப்பு என்ன வென்றால் அதனை உண்டவன் சிறுநீரில் அது சற்றும் தன் வெறிக் குணத்தை இழக்காமல் (ஏன், சற்று அக் குணத்தை மிகுதிப்படுத்திக் கொண்டே) வெளிவரும். எனவே அக் காளான் உண்டவன் சிறுநீரை இன்னொருவன் விரும்பிக் குடிப்பது தொன்று தொட்டு (இன்றும்)சைபீரியப் பழங்குடி மக்களிடம் இருந்து வரும் பழக்கமாகும் † அதைப்போலவே பண்டை ஆரியரிலும் சோமச் சாற்றை உண்டவன் சிறுநீரைப் பிறர் குடித்துத் தாமும் வெறி அடைந்தனர் என்று கருத இரிக்கு வேதத்தில் இடமுண்டு என்கிறார் வாசன். அவ்வேதம் 8ஆம் மண்டிலம் 4–10 பின் வருமாறு இந்திரனை வேண்டுகிறது:-

நீர்வேட்கை கொண்ட மானைப்போல இங்கு
ஓடிவந்து குடி,
வேண்டுமட்டும் சோமச்சாற்றைக் குடி.

---

† காண்க: ஆலிவர் கோல்டுசுமித்: "உலகக் குடிமகன்" (The Citizen of the world) 1762: 32 ஆவது கடிதம்.

W. போகோராசு: (Bogoras) சக்சீ மக்கள் (The Chukchee)

Memoirs of the American Museum of Natural History 205-207, 1904.

G. கென்னன் (Kennan): Tent Life in Siberia G. P. Putnam's Sons, 1910.

சிறந்தவனே, ஒவ்வொரு நாளும் சோமச்சாறுகவே
நீ மோளும்படி குடி.
நீ மிகச்சிறந்த வலிமையைப்
பெற்றுள்ளாய் [1]

சிறுநீரில் சோமச்சாறுகவே வரவேண்டுமானுல் அச்சாறு மேற் சொன்ன காளானிலிருந்து எடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்பது வாசன் கருத்து. இன்றும் இந்தியாவெங்கும் பார்ப்பனிய சமயப் பற்ருளர் மாட்டின் சிறுநீரைத் தனியாகவும், சாணம், பால் நெய், தயிர் ஆகியவற்ரெடு கலந்து "பஞ்சகவ்யம்" என்னும் பெயராலும் விரும்பி உண்கின்றனர் அன்ரே? வட நாட்டில் அன்ஞர் இன்றும் தங்கள் ஆசான் (குரு) சிறுநீரையும் விரும்பி உண்பது இயல்பு [2] இந்நாளில் இப்பொருள்களுக்குக் கடவுட் டன்மை கற்பிக்கப்பட்டிருப் பினும், பண்டையாரியர் வழிபாடுகளில் சோமச்சாறுண்டோன் சிறு நீரைப் பிறர் குடிக்கும் வழக்கத்திலிருந்து மேற்சொன்ன இந்நாள் வழக்கங்களும் எழுந்திருக்கலாம் என்பது வாசன் கருத்து. ஆனுல் இப்பொருள் கொள்வதைவிட சோமச்சாறுகக் குடித்துச் சோமச்சாருக மோள்கிறுன்" என்பதற்கு இந்திரன் மிகுதியாகக் குடித்தான் என்று மட்டும் பொருள் கொள்வதே சிறந்தது என்பது ஆர்வார்டு பல்கலைக்

[1] Like a thirsty stag, come here to drink
Drink Soma, as much as you want
Pissing it out by day.O generous one,
You have assumed your most mightyforce

[2] திபேத்தியர் இதையும் மிஞ்சிவிட்டனர்!! அவர்கள் தலாய் லாமாவின் விட்டையை (மலத்தை)ச் சிறு சிறு வில்லைகளாக்கி நாடெங் கிலும் பெருவிலைக்கு விற்பர். அந்த விட்டை வில்லையை உண்பதால் தீராத பிணி இல்லை; நீங்காத கேடில்லை என்பது லாமாக்கள் மக்களிடையே பரப்பி வைத்திருந்த கருத்தாகும்! (காண்க; Pinkerton's voyages, 1814 என்னும் நூலையும் Bourke J. G. Scatalogic Rites of all Nations. W. H. Lowdermilk & Co; Washington, 1891 என்னும் நூலையும்). வெள்ளையர் ஆட்சித் தொடக்க முதல் தாழ்த்தப் பட்டோரும் புதுமைக்கல்வி பெரும் நிலை இந்நாட்டில் ஏற்பட்டிரா விடில் இதற்குள் நாமும் யார் யாரோ "ஆசாரியர்"கள் "மகான்" களது விட்டை வில்லைகளை விழுங்கும் நிலைக்கு வந்திருப்போம் என்க!

கழகச் சமசுக்கிருதப் பேராசிரியர் எச். எச். இங்கால்சு (Ingals) கருத்தாகும் (JAOS-91-2 பக்கங்கள் 188-191)

8. மேற்சொன்ன காளானிலிருந்துதான் சோமச்சாறு எடுக்கப் பட்டது என்னும் கருத்து பல அறிஞரால் ஏற்கப்பட்டுள்ளது. [American Anthropologist-72-ஆம் மடலம் 2-ஆம் எண் (1970 ஏப்ரல்) பக்கங்கள் 368-73] எனினும் சிலர் இதற்கு இன்னும் சான்றுகள் தேவை என்கின்றனர் [John Brough: Bulletin of the School of Oriental & African Studies 35 ஆம் மடலம் 2 ஆம் பகுதி (1971 சூன்) பக்கங்கள் 331-362]

9. மேற்சொன்ன காளான் இந்தியாவில் வளர்வது இல்லை. ஆரியர் இந்தியாவிற்குள் நுழைந்தபின் சில காலம் அக்காளான்களை நடுவண் ஆசியாவிலிருந்து (உலர்ந்த காளான்களாக) பெற்றுப் பயன் படுத்தி வந்தனர் என்று கருதப்படுகிறது. இரிக்கு வேதத்தில் சேர்க்கப்பட்டுள்ள பிற்காலப் பாடல்கள் எழுதப்பட்ட காலம் தொடங்கியே சோமக் காளான் ஆரியர்க்குக் கிட்டவில்லை என்பது தெரிகிறது. இரிக்கு வேதம் 10 ஆம் மண்டிலம் 85-3-லேயே எது சோமமோ அதைக் குடிப்போர் யாருமில்லை [3] என்று அப்பாடலாசிரியன் அங்கலாய்க்கிறான். இரிக்கு வேதக்காலத்திற்குப்பின் சோமச்சாறு எதிலிருந்து எடுக்கப்பட்டது என்பதைப் பார்ப்பனர் அறவே மறந்து விட்டனர். எனவே வாசனின் ஆராய்ச்சி முடிவு மிக இன்றியமையாததாகும். O

[3] One thinks one drinks Soma
because a plant is crushed
The Soma that the Brahmans know,
that no one drinks.

தென்மொழி, கடலூர் - I.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா	14 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	5 உருபா	6 உருபா.	7-50
தனியிதழ்:	75 காசு	90 காசு	1-10

ஆறாத மனப்புண்!

பாவலர் மு. மகிழரசன்

கூறாக நம் மெய்யில் ஒருகையை,
	கால்விரலைக் கூர்த்து வெட்டி
வேறாக வே நீக்கி விடப்பட்டோம்
	என்றாலும் வெம்புண் ஆற்றி
ஏறாக நடந்திருப்போம்! எந்நாளும்
	மகிழ்ந்திருப்போம் எங்ஙன் ஆனால்
ஆறாத மனப்புண்ணிற்(கு) ஆட்பட்ட
	கொடுமையினை ஆற்று வோமோ? —1

உயிருக்கே உலைவைக்கப் பட்டோமென்
	றல்லல்கள் உற்றோம் என்றால்
மயல்கொள்ளோம்! தூசென்று மதித்திருப்போம்!
	மற்றதுதான் குலைவுற் றாலும்
செயிரன்றே என்றாற்றிச் செம்மாந்து
	நடந்திருப்போம்; செய்வ தென்கொல்?
துயருக்கே சுடப்பட்டுத் துன்புறுநம்
	மனப்புண்ணைத் துடைப்ப தற்கே! —2

பயில்சுவையின் நாவிற்குப் புண்ணென்று
	பட்டாலும், பசியின் மாழ்கும்
வயிற்றுக்கூண் இலையென்று வாயடைக்கப்
	பட்டாலும் வம்பே இல்லை!
உயிர்சிறிதென் றுடல்சிறுப்போம்! உறுகுறைகள்
	பொறுத்தமைதி உறுவோம்; ஆனால்
செயிர்சிறிதும் இலாமனத்துச் சேர்துயர்புண்
	ஆற்றுதற்கென் செய்வோம் நெஞ்சே! —3

மூக்கடைப்பேற் பட்டாலும் மூச்சுதிணை
	றிட்டாலும் முன்பின் காட்சி
நோக்கடைப்பேற் பட்டாலும் நோய்ப்படைந்து
	கெட்டாலும்[நோன்று நோன்று
நீக்கடிப்போம் என்றாற்றி நெடுங்காலும்
	நிமிர்ந்திருப்போம்! நீணி லத்தே
ஊக்கிடைபுக்(கு) ஊறிடைசென்(று) உள்நோம்புண்
	ஆற்றிஎங்ஙன் ஊன்று வோமோ? —4

மொத்துண்டு கிடந்தாலும் முணகிஅழு
திருந்தாலும் மொய்ம்பு கெட்டுக்
குத்துண்டு குற்றுயிராய்க் குலையுயிராய்ப்
புரண்டாலும் குருதிப் புண்ணுக்[கு]
ஒத்தடமும் கொடுத்திருப்போம்; ஓய்வினிலே
படுத்திருப்போம்; ஒழிப்போம்; ஆனால்
கத்தியழும் துயர்மனத்தின் கடும்புண்ணை
ஆற்றிஎங்ஙன் கடக்குவோமோ? —5

நெடுமுதுகு விரிபட்டும் நெஞ்செலும்பு
முறிபட்டும் நெடிதிளைத்தே
இடுப்பொடிக்கப் பட்டுந்தான் இடர்ப்படுவோம்
என்றாலும் இழைந்த புண்ணை
எடுத்தெறிவோம் என்றிருந்தே எள்ளளவும்
கவலையின்றி எழுவோம்; ஆனால்
அடுத்தடுத்துத் தாக்குண்(டு)ஆறாதமனப்
புண்ணைஎங்ஙன் ஆற்றுவோமோ? —6

பிழைப் பொழிக்கப் பட்டோமேல் பித்தடைய
மாட்டோம்; நாம் பிறழோம்; நம்பிக்
கழுத்தறுக்கப் பட்டோமேல் கருத்தழிய
மாட்டோம்; வீண் கவலை கொள்ளோம்;
அழித்தழிப்போம் என்றாற்றி அமைந்திருப்போம்;
அதற்குவழி அறிவோம்; எங்ஙன்
வழிக்குறுக்கே நமைவாட்ட வருகின்ற
மனப்புண்ணை ஆற்றுவோமோ? —7

வலிவொடுக்கப் பட்டோமேல் வளர்மேனி
'நிலையென்று' வருந்த மாட்டோம்;
தலையினிலே கல்லெறிந்து தாக்குண்டோம்
என்றாலும் தளர மாட்டோம்;
இலவம்பஞ் செனமதித்தே இடராற்றி
அமைந்திருப்போம்; எங்ஙன் ஆனால்,
அலைபுயலின் நடுச்செறிந்த அருள்மனத்தின்
கொடும்புண்ணை ஆற்றுவோமோ? —8

தீராத பழியுரைத்துந் திரிகின்றார்!
தூற்றி நமைத் தீய்ப்ப தற்கே

கண்ணகி வழக்குரைத்தது எப்பொழுது...?

அ. திருமாலிந்திரசிங். (க. மு.)

கோவலக்களக் காதை, ஆய்ச்சியர் குரவை, துன்பமாலை, ஊர்சூழ்வரி, வழக்குரைகாதை, வஞ்சினமாலை, அழற்படுகாதை, எனும் அனைத்துக் காதைகளின் நிகழ்ச்சியும் ஒரே நாளில் நடைபெற்றவையே என்று பரவலாக எண்ணப் பெற்று வருகின்றது. [தென்மொழி-சனவரி 1972.]

இக்கருத்துப்படி.... கோவலன் எற்பாட்டின்போது (அஃதாவது இன்றையப் பொழுதில் மாலை 3-இலிருந்து 4 மணிக்குள்) வெட்டப்படுகின்றான். வெட்டப்பட்டு வீழ்ந்து கிடக்கும் அவனைக் கண்ணகி காணும் பொழுது கதிரவன் மறைந்த மாலைக் காலமாகி விடுகின்றது. இதை

மல்லன்மா ஞால மிருளூட்டி மாமலைமேல்
செவ்வென் கதிர்சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்பப்
புல்லென் மருண்மாலைப் பூங்கொடியாள் பூசலிட
ஒல்லென் றொலிபடைத்த தூர்.

[—*சிலம்பு: ஊர்சூழ்-31–34*]

என்னும் அடிகளால் அறிகிறோம்.

முன்பக்கத் தொடர்ச்சி

நேராத பொல்லாங்கை நெடிதுரைத்து
விரிக்கின்றார்! நாக் கூசாமல்
ஏராளம் பொய்க்கதைகள் புனைகின்றார்!
இயம்புகின்றார்! இடுக்கண் எல்லாம்
சீராகச் செய்கின்றார்! சிரிக்கின்றார்;
மகிழ்கின்றார்! நெஞ்சே! நெஞ்சே! —9

அஞ்சாத நெஞ்சைக்கண்(டு) ஆணவம்காண்!
அடக்கடக்கென் றேஆர்க் கின்றார்!
நெஞ்சுள், நம் பணியாத நிமிர்வுக்கே
புகைகின்றார்! நெளிந்து நின்று
கெஞ்சாத சீர்மைக்கும் கீழ்ச்சாயா
நேர்மைக்கும் புழுங்கி நெஞ்சம்
துஞ்சாமல் கரவாகத் தீங்கிழைக்கத்
துணிகின்றார் நெஞ்சே! நெஞ்சே! —10

எனவே கதிரவன் மறைந்த பின்னர் கோவலனைக் காணவந்து அழுது புலம்பி வழக்குரைக்கும் எண்ணத்தோடு எழுந்து காவலன் மாளிகை யடைந்து வாயிற்காவலன் இசைவு பெற்று அரசனிடம் கண்ணகி வழக்குரைக்கும் பொழுது எப்படியும் இரவு 8மணிக்கு மேல் ஆகியிருக்கும்.

இரவு 8மணிக்கு மேலும், அரசன் தன் சுற்றம் புடை சூழ, மக்களின் குறை தீர்க்க அமர்ந்திருந்தான் என்ற கருத்து பாண்டியனுக்குப் புகழைத் தருவதாயினும் நடை முறையில் இயலுமாறு தெரிய வில்லை.

பாண்டியன்....அமைச்சர் முதலிய சுற்றஞ்சூழ அரசவையில் இருந்தான் என்பதை ...

"... ... ...தேவி தன்னுடன்
அரைசுக் கட்டிலில் துஞ்சியது அறியாது
ஆசான் பெருங்கணி அறக்களத்து அந்தணர்
காவிதி மந்திரக் கணக்கர் தம்மொடு
கோயில் மாக்களும் குறுந்தொடி மகளிரும்
ஓவியச் சுற்றத்து உரையவிந் திருப்பக்
காழோர் வாதுவர் கடுந்தேர் ஊருநர்
வாய்வாள் மறவர் மயங்கினர் மலிந்து
கோமகன் கோயிற் கொற்ற வாயில்
தீமுகங் கண்டு தாமிடை கொள்ள ... ..."

[அழற்படு...6-15.]

என்னும் அடிகளால் அறிகிறோம்.

இனி, கண்ணகி இரவில் வழக்குரைக்க வில்லை என்பதற்குச் சில சான்றுகளைப் பார்ப்போம்.

இங்கு நாம் பாண்டிமா தேவியின் கனவைச் சிறிது ஆழ்ந்து நோக்க வேண்டும். அவள் எப்பொழுது கனவு கண்டாள் அதனை எப்பொழுது மன்னனிடம் உரைத்தாள் என்பதைக் காண வேண்டும்.

பாவியப் போக்கின்படி, கண்ணகி வாயிலோனிடம் தன் வரவை மன்னனுக்கு உணர்த்துமாறு கூறிய பொழுது உள்ளே பாண்டிமா தேவி தன் கனவைச் சொல்லிக் கொண்டிருக்கிறாள். அஃதாவது கதிரவன் மறைந்த நெடுநேரத்திற்குப் பின்..... இது நிற்க

"படைத்தமுற் சாமமோ ராண்டிற் பலிக்கும் பகரிரண்டே
கிடைத்தபிற் சாமமிகு திங் களெட்டிற் கிடைக்குமென்னும்

இடைப்பட்ட சாமமோர் மூன்றினிற் றிங்களொர் மூன்றென்பவால்
கடைப்பட்ட சாமமு நாள்பத் துளேபலங் கைபெறுமே."

(கனுநூல்-2 சிலப்பு; அடியார்க்கு நல்லார் உரையில் உரைமேற்கோள் பக்கம்: 404)

என்று கனுநூல் கூறுவதாக அடியார்க்கு நல்லாரால் எடுத்துரைக்கப் பெறும் இந்நூற்பாவின் மூலம் பாண்டிமா தேவி கண்ட கனு உடனே பலித்தமையால் அவள் கடையாமத்தில் கனவு கண்டிருத்தல் வேண்டுமென அறியலாம்.

எனவே காலையில் தான் கண்ட கனவை-தீக்கனவை- அன்று பகலில் இரண்டு முறையும் அரசனைப் பார்த்த பொழுது கூருமல் இரவு 8 மணிக்கு மேல் சென்றே கூறினுள் பாண்டிமா தேவி என்பது எவ்வாறு பொருந்தும்?

மேலும் பாண்டிமாதேவி தான் கண்ட கனவைத் தன் சேடிகளுக்குக் கூறி மன்னனுக்கு இதை நாம் சொல்ல வேண்டும் என்று கூறும் பொழுது, தான் காலையில் கண்ட கனவை மாலைவரை மறந்திருந்ததாய்க் கூறக்காணேும்.

'வருவதோர் துன்பமுண்டு மன்னவர்க்கியாம் உரைத்தும்' எனக்கூறி உடனே புறப்பட்ட தாகவே, அமைக்கிருர்.

மேலும் கண்ணகி அரசனைக் காண வந்த அதே நேரத்தில் (அஃதாவது ஏறத்தாழ இரவு 8 மணிக்கு) பாண்டிமா தேவியும் அரசனைக்கண்டு தன் கனவைக் கூறவந்தாள் எனக் கொண்டால் அவள் தன் உவளகத்திலிருந்து அ ர ச வை க் கு வரும்பொழுது, அவளுடைய பணிப்பெண்கள் ஏந்தி வந்ததாகக் கூறப்படும் எத்தனையோ அழகுப் பொருள்களுக் கிடையில் 'விளக்கை' (light) எடுத்து வந்ததாகக் கூறப்படவில்லை.. இதுவும் கருதுதற்குரியது.

பின்னுல் கால்கோட் காதையில் செங்குட்டுவன் போருக்குப் புறப்படுமுன் தன் குடையையும் வாளையும்வெளியில் விடும் பொழுதில் அஃது இரவுக்காலம் என்பதைக் குறிக்க முதலில் விளக்கைத்தான் குறிக்கிருர்.

இரவு இடங் கெடுத்த நிரைமணி விளக்கின் (கால்கோ ள்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

செய்து வாய்பாட்டு வினைகள்

இரா. கோதண்டராமன், க. மு. (தமிழ்) க. மு. (மொழியியல்)
மொழியியல் துறை, அண்ணமலைப் பல்கலைக் கழகம்.

அமைப்பைப் பொறுத்தவரையில் நிகழ்வுப் பொருண்மையையும் எதிர்வுப் பொருண்மையையும் உணர்த்தும் செய்து வாய்பாட்டு வினைகளும், இறந்த காலப் பொருண்மையை உணர்த்தும் செய்து வாய்பாட்டு வினைகளும் முற்றிலும் மாறுபட்டவையாகும். இவ் உண்மை காலப் போக்கில் மறக்கப்பட்டு விட்டது. இதன் விளைவாகக் கட்டளைப் பொருண்மை உணர்த்தும் வினைகளின் பகுதியாக விளங்கும் செய்து வாய்பாட்டு வினைகள் இறந்தகாலப் பொருண்மையை உணர்த்துவன என மொழிநூலார் தவருகக் கருதும் நிலை ஏற்பட்டது.[1] இவ்வாறே எதிர்கால வினைமுற்றுகள் பயனிலையாக அமையும் தொடரன்களில் நிகழும் செய்து வாய்பாட்டு வினையெச்சங்களும் இறந்காலத்தன எனப் பிறழ உணரப் பெற்றது. இதனுல் எச்ச வினைக்கும் பயனிலையாகிய எதிர்கால முற்று வினைக்கும்

[1] The more common type of the formation of the conditional is the addition of the conditional suffix to the past stem of a verb — Dravidian Verb Morphology (Page 236) P.S.Subramnyam.

(முன்பக்கத் தொடர்ச்சி)

எனவே பாண்டிமாதேவி கனவுரைக்க வந்தபொழுது விளக்கு கூறப்படாமையின் அவள் கனவைக் கூறியபொழுது இரவு நேரம் அன்று என்பதும் பகலில்- அதுவும் காலையில்- என்பதும் தெளிவு.

அப்படியாயின் பாண்டிமாதேவி தன் கனவைச் சொல்லிக் கொண்டிருந்த பொழுது வழக்குரைக்க வந்த கண்ணகியும் உறுதியாகக் காலையில்தான் வந்திருக்க வேண்டும்.

அப்படியாயின், மாலையில் தன் கணவனைக் கண்டபின் கண்ணகி அடுத்த நாள் காலைவரை எங்குச்சென்ருள்? என்ற விஞ எழுகின்றது.... இதற்குரிய விடை என்ன? ... இளங்கோ தாம் எழுதிய பாவியத்தில் உணர்ச்சி வேகத்தில் கால உணர்வை மறந்து விட்டாரா? அறிஞர்கள் எண்ணுவார்களாக. 0

கால இயைபு அமையாமல் போயிற்று. இங்ஙனம் கால இயைபு அமையாமற் போனதற்குரிய காரணங்களைக் குறித்து யாரும் ஆராய்ந்ததாகவும் தெரியவில்லை. வரலாற்று நிலையில் இருவேறு செய்து வாய்பாட்டு வினைகள் நிகழ்ந்த செய்தி புலப்படாமற் போனதால், மொழியாராய்ச்சியில் கடந்த நூற்றுண்டுகளுக்கும் மேலாக நிகழ்ந்த குழப்பங்களும், நிகழ்ந்து வரும் குழப்பங்களும் எண்ணற்றவையாகும்.

கட்டளை வினைகளின் பகுதியாக விளங்கும் செய்து வாய்பாட்டு வினைகள் இறந்தகாலப் பொருண்மையை உணர்த்துவனவல்ல என்பதைக் கண்டோம். இனி கட்டளை விகுதிகளாகிய —ஆல்– ஆனுல் ஆகிய இடைச் சொற்களின் அமைப்பைக் காண்போம், –ஆல் என்னும் விகுதி செய்து வாய்பாட்டு வினைகளை யடுத்தும், –ஆனுல் என்னும் விகுதி செய்து வாய்பாட்டு வினைகளின் அடியாகப் பிறந்த வினை முற்றுகள் மற்றும் எதிர்கால வினை மூற்றுகள் ஆகியவற்றை அடுத்தும் நிகழ்ந்து கட்டளைப் பொருண்மையைக் குறித்துச் செல்கின்றன.

செய்யும் வாய்பாட்டு வினைகள் ஈற்றுமிசை உகரம் கெட செய்ம் என வடிவு குறுகி நிற்பதைப் பிறிதோரிடத்தில் இக் கட்டுரையில் குறிப்பிட்டோம். இவ்வாறு சொல்லின் இடையில் நிகழும் உயிர் கெடுவதும், அதனுல் அச் சொல் வடிவில் குறுகி நிற்றலும் திராவிட மொழிகளில் இயல்பாகக் காணப்படுவதொன்றுகும். தமிழில் பின்வரும் சொற்களில் இந்நிலையைக் காணலாம்.

பொலம் > பொல்ம் > பொன்ம் > பொன்
போயின (போய்+இன்+அ) > போய்ன > போன
ஆயின (ஆய்+இன்+அ) > ஆய்ன > ஆன
சொலின (சொல்+இன்+அ) > சொல்ன > சொன்ன
எலும்பு > எல்ம்பு > என்ம்பு > என்பு

இவ் எடுத்துக்காட்டுகளில் மூலவடிவங்களில் நின்ற அ, இ, உ ஆகிய உயிர்கள் கெட்டு நிற்பதைக் காணலாம். இதைக் கருத்தில் கொண்டு கட்டளை விகுதியாகிய ஆல் என்பதன் மூல வடிவத்தை * ஆயில் (ஆய்–இல்) என உருவமைக் கலாம். செயில் வாய்பாட்டுக் கட்டளை வினையாகிய ஆயில் என்னும் வினையில் இடை

யில் நின்ற இகரமும், பின்னர் யகரமும் கெட்டு, ஆல் என்னும் கட்டளை விகுதி தோற்றம் கொண்டதாகத் துணியலாம். ஆல் விகுதியின் வரலாற்றைச் சுருக்கமாக * ஆயில் > * ஆய்ல் > ஆல் எனக் குறிக்கலாம். இதைப் பின்புலமாகக் கொண்டு செய்தால் வாய்பாட்டுக் கட்டளை வினைகளை வரலாற்று நிலையில் *செய்தாயில் (செய்து + ஆயில்) என உருவமைக்கலாம்.

வினைமுற்றுகளை அடுத்து நிகழும் —ஆனல் என்னும் கட்டளைக் கிளவியையும் இவ்வாறே ஆராயலாம். இக்கிளவியை ஆன் + ஆல் எனப் பிரித்து, ஆல் என்பதை * ஆயில் என்பதன் திரிபாகவும், ஆன் என்பதை * ஆயின் என்பதன் திரிபாகவும் கொள்ளலாம். * ஆயில் என்ற கட்டளை வினை எவ்வாறு இகரமும் யகரமும் கெட்டு -ஆல் எனத்திரிந்ததோ அவ்வாறே * ஆயின் என்ற கட்டளை வினையும் இகரம் கெட்டு * ஆய்ன் எனவும், யகரம் கெட்டு ஆன் எனவும் அமைந்தது. -ஆனல் என்னும் கட்டளைக்கிளவி செயின் வாய்பாட்டுக் கட்டளை வினையாகிய ஆயின் என்பதையும், செயில் வாய்பாட்டுக் கட்டளை வினையாகிய ஆயில் என்பதையும் தன்னகத்தே கொண்டியல்வதாகும்.

இக்கட்டுரையை முடிப்பதற்கு முன்னர் செய்து வாய்பாட்டு வினைகளில் செயப்படு பொருள் குன்றிய பொருண்மையும், செயப்படு பொருள் குன்றாப் பொருண்மையும் எங்ஙனம் விளக்கம் பெறுகின்றன என்பதைக் குறிப்பிட்டாகல் வேண்டும். பெரும்பாலான செய்து வாய்பாட்டு வினைகள் செய் + இம் + து/ செய் + உம் + து என்ற அமைப்பில் செயப்படு பொருள் குன்றிய பொருண்மையையும், செய் + இய் + து/ செய் + உ + து என்ற அமைப்பில் செயப்படு பொருள் குன்றாப் பொருண்மையையும் உணர்த்துவனவாக இருக்கின்றன. பழந்தமிழில் வினைமுற்று விகுதியாகி துகரக்கிளவியை ஏற்காமல் நின்று வினையெச்சப் பொருண்மையை உணர்த்தும் வினைகளைக் கூர்ந்து நோக்கும் போது காலக்கிளவியே செயப்படு பொருள் குன்றிய பொருண்மையையும், குன்றாப் பொருண்மையையும் உணர்த்தும் செய்தி பெறப்படுகிறது. விரிவஞ்சி இங்கு எடுத்துக்காட்டுகள் தரப்பெறவில்லை. எனவே தொடக்கத்தில் இப்பொருண்மைகளை உணர்த்த தனிக்கிளவிகள் ஏதும் வழங்கப்பெறவில்லை என்று தெரிகிறது.

இக்கட்டுரையில் தெளிவுபடுத்தப் பெற்றிருக்கும் இன்னொரு செய்தியையும் இங்குக் குறிப்பிட்டாகல் வேண்டும். இலக்கணப்புலவர்களாலும், மொழிநூலாராலும் செய்து வாய்பாட்டு வினைகளில் உள்ள துகரக் கிளவி ஒருமுகமாகக் காலக் கிளவியெனக் கருதப் பெற்று; வருகிறது. இக் கட்டுரையில் அது மறுக்கப் பெற்றிருப்பதுடன், துகரக்கிளவியை வினைமுற்று விகுதியாகத் துணியப் பெற்றிருக்கிறது. வரலாற்று நிலையில் துகரக்கிளவி வினைமுற்று விகுதியேயாகும். தொல்காப்பியரும் இதனை வினைமுற்று விகுதியாகவே குறித்துச் செல்கிறார். (சொல்.சேனா.203&217) துகரக்கிளவி காலப்பொருண்மையை உணர்த்துவது உண்மையானால் செய்து வாய்பாட்டு வினைகளின் எதிரன வாகிய செய்யாது வாய்பாட்டு வினைகளில் அதற்கு இடமில்லை. ஆனால் அவற்றிலும் துகரக் கிளவி இடம்பெற்றே நிற்கிறது. வினைமுற்று விகுதி ஒன்றே உடன்பாட்டு வினைகளிலும், எதிர்மறை வினைகளிலும் மாறாமல் இடம்பெற்று நிற்கும். இவ் உண்மையை மறந்து இலக்கணப் புலவர் சிலர் செய்யாது வாய்பாட்டு வினைகளை செய் + ஆத் + உ எனப் பிரித்து -ஆத்- என்பதை எதிர்மறைக் கிளவியாகக் கொண்டு, அதிலுள்ள தகரத்தை விளக்க முடியாமல் எழுத்துப் பேறு எனப் பெயரிட் டழைத்தனர். உண்மையில் செய்யாது வாய்பாட்டு வினைகள் வரலாற்று நிலையில் செய் + ஆ + து என்ற அமைப்பின வாகும். (முற்றும்)

---

* 'பாவை' என்னும் பெயரில் மீண்டும் நடையிடவிருந்த இதழ் 'வலம்புரி' என்னும் பெயரில் வெற்றி முழக்கமிடுகிறது.

"வலம்புரி"

ஆசிரியர்

புலவர் இறைக்குருவனார்

0 தமிழுக்கு ஆக்கமும் தமிழர்க்கு ஊக்கமும் அளிக்கும் செந்தமிழ்த் தாளிகை.

0 'பாவை' உறுப்பினர்கட்குத் தொடர்ந்து இதழ்கள் விடுக்கப்பெறும்.

தனியிதழ் 0-25 காசு ஆண்டுக்கட்டணம் 3 உருபா

விற்பனையாளர்கள் தொடர்பு கொள்க.

வலம்புரி

(திங்களிதழ்)

மதுரை-10.

'தென்மொழி'க்கு நன்கொடை.

1-8-70 முதல் 12-10-70 முடிய, தென்மொழியின் வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையால் அறவினை ஒப்பும் அத்தமிழ் நெஞ்சங்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

	உரு.
திரு. பி. தங்கவேலு, மைசூர்.	5—00
திரு. உ. ச. எழில், செட்டிக்குறிச்சி	2—00
மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி	4—00
திரு. ஆ. சண்முகம், ஈரோடு	5—00
திரு. கலை-பெருஞ்சித்திரன், கெ. கல்லுப்பட்டி	50—00
திரு. வேலரங்கன், சோமையனூர்	20—00
திரு. க. ப. அறவாணன், சென்னை	10—00
திரு. இரா. கணேசன், சேலம்	1—00
திரு. சி. பெ. ஆறுமுகம், நடுப்பாலாபுரம்	1—50
திருமிகு. உமையாள், ஆவிரன்குடி	1—00
மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி	4—00
திரு. க. க. ஆறுமுகம், கருக்கம் பாளையம்	15—00
திருவாளன்மார், பொன்—மாந்தனரிமா, பசுமலையரசன் பெங்களூர்—உண்டியல் வழி திரட்டியது	11—50
திரு. உ. ச. எழில், வாள்வாங்கி	1—00
திருவாளன்மார் பெ. செல்லையா, பெ. புதுமைப் பிரியன், பெ. அரசு, சின்னத்தம்பி	100—00
மா. தென்னவன், பெகும்பகல்லா	0—50
மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி	4—00
பம்ரேலி திரு. கலைமாணிக்கம் அவர்கள் வழி	
தொல்காப்பியர் மன்றம், நடுவண் வான்படைத் தலைமைச் செயலகம், பம்ரேலி	20—00
திருவாளன்மார். வரதராசன், சோசப், இராசகோபால், செயராமன், கலை மாணிக்கம், விசுவநாதன், பிச்சை, மாணிக்கம், (உருபா 5 மேனி)	40—00
திரு. குமார்	3—00
திருவாளன்மார் சங்கரன், முருகன், அண்ணாமலை, இலக்குவன், கிருபாநிதி, இலாரன்சு, அருச்சுனன் (உருபா 2 மேனி)	14—00

(தொடரும்)

தனித்தமிழ் அன்பர்களுக்கு ஊக்கமூட்டும் ஒரு நல்ல செய்தி!

பிரான்சிலும் தனிப் பிரஞ்சுமொழி இயக்கம்

கலப்படத்தை ஒழித்துவிட்டுத் தாய் மொழியைக் காப்பதற்கு அரசினரே ஆர்த்து எழுந்துள்ளனர்.

தமிழக அமைச்சர்களின் பார்வை இதில் படட்டும்!

(இராய்ட்டர் செய்தியாளர் டேவிட் இலாடே எழுதியது)

கடைசியாக, உலக முழுவதிலும் பிரஞ்சு மொழிக்குள்ள உயர்வைக் காப்பதற்கான இயக்கத்திற்குப் பிரஞ்சு அரசே அரவணைப்பு வழங்கத் தொடங்கியிருக்கிறது.

பிரான்சின் குறிக்கோளுக்கு உதவியாக இருப்பதை இத்தாலியர்கள் கைவிடத் தொடங்கியுள்ள போதிலும் கூடப், 'பிராங்லெய்சை' (பிராங்லெய்சு என்பது ஆங்கிலச் சொற்கள் கலந்து கலப்படமான பிரஞ்சுமொழி) ஒழித்துவிட்டு, மக்களிடம் பெருகிவருகிற ஆங்கில இரவல் சொற்களுக்குப் பகரமாகக் கலப்பற்ற பிரஞ்சுமொழிச் சொற்களைக் கொண்டு வருவதற்காகப் பிரஞ்சு அரசு முதன்முதலாக முறையான, நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

கண்டிப்பான கட்டளை

பிரான்சின் தலைமை அமைச்சர் சேக்சு சாபான் டெல்மா அரசின் திணைக்களங்கள் (இலாகாக்கள்) அனைத்திற்கும் இப்போது கண்டிப்பான கட்டளை யொன்று இட்டிருக்கிறார். 'விரும்பத்தகாத வேற்று மொழிச் சொற்களின் பட்டியல் ஒன்றைத் தொகுத்து அந்தச் சொற்களுக்குப் பகரமாகப் புதிய பிரஞ்சுமொழிச் சொற்களை உருவாக்குங்கள்' என்பதுதான் அந்தக் கட்டளை.

புதிய சொற்கள் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டால். பிறகு பிரஞ்சு அரசிடம் வேலைபார்க்கிற யாரும் அதிகார ஆவணங்கள் (பத்திரங்கள்), ஒப்பந்தங்கள், அறிக்கைகள், அறிவிப்புகள் ஆகிய வலைறில் பழைய கலப்புச் சொற்களைப் பயன்படுத்த முடியாது என்று தலைமையமைச்சர் தமது கட்டளையில் கூறியிருக்கிறார்.

டிகால் துவக்கிய இயக்கம்

இந்தக் கட்டளை முதன்மை மிக்கது என்பதை வலியுறுத்து வதற்காக அரசு இதனைத் தனது அதிகார ஏட்டில் வெளியிட்டிருக் கிறது. இந்தக் கட்டளைதான் பிரஞ்சு மொழியைக் காப்பதற்கான இயக்கத்திற்கு இதுவரை கிடைத்துள்ள அரவணைப்புகள் அனைத் திலும் பெரியதாகும். காலஞ்சென்ற ஏனுதி (செனரல்) டிகால் அவர் களால் தொடக்கப்பெற்ற இந்த இயக்கத்தை அவருக்குப் பின்னர் நாட்டின் நாயகராக (அதிபராக)ப் பதவியேற்ற சியார்சு பாம்பீடு வும் தாங்கி வருகிறார். தலைமையமைச்சரின் கட்டளை வந்த சில நாட் களுக்குப் பிறகு இத்தாலிய மக்களிடம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப் பின் முடிவு அறிவிக்கப்பட்டது. அந்த முடிவு பிரஞ்சுக்காரர்களுக்கு மகிழ்ச்சியை உண்டு பண்ணவில்லை. பிரஞ்சு மொழிக்குப் பகரமாக ஆங்கில மொழியே விரிவு படுத்தப்பெற்ற ஐரோப்பியப் பொது வாணிக மண்டலத்தின் தலைமை மொழியாக இருக்கவேண்டுமென இத் தாலிய மக்களில் பெரும்பாலோர் விரும்புகிறார்கள் என்பது அந்தக் கருத்துக்கணிப்பு வாயிலாகத் தெரிய வந்தது.

பொதுவாணிக மண்டலத்தில் தங்களுடன் சேர்ந்திருக்கிற மற்றும் இரண்டு பெரிய பங்காளிகளான மேற்குச் செருமானியர் டச்சுக்காரர் ஆகியோரும் ஆங்கிலத்தின் பக்கமே சாய்கிறார்க ளாத லால், பிரான்சின் இலத்தீன் அண்டை நாட்டவரான இத்தாலியர் தெரிவித்த இந்த நட்பற்ற கருத்துப் புறங்கூறலுக்கே சமமாகும் என்று பிரஞ்சுக்காரர்கள் கருதினர். விரைவில் பிரிட்டனும் பொது வாணிக மண்டலத்தில் சேர விருப்பதால் நிலைமை மேலும் இழிந்த தாகி விடும்.

சொல்லாக்கக் குழுக்கள் அமைக்கப்படும்

அமைச்சர்களின் தனித் தனித் துறைகளில் எந்தெந்தச் சொற்களைப் பயன்படுத்தலாம் என்பதை முடிவு செய்வதற்காக அமைச் சர்களால் சொல்லாக்கக் குழுக்கள் அமைக்கப்படும் என்று திரு. சாபான் டெல்மா தமது கட்டளையில் சொல்லி யிருக்கிறார்.

ஒரு குறிப்பிட்ட துறையில் எந்தெந்தக் கருத்துகளைக் குறிப்பதற்குப் பிரஞ்சுமொழிச் சொற்கள் பற்றுக் குறையாக இருக் கின்றன என்பது பற்றிய பட்டியல் ஒன்றைத் தொகுப்பதும்

பிரஞ்சு மொழியில் புகுந்துள்ள விருப்பத்தகாத பிறமொழிச் சொற்களுக்குப் பகரமாகப் பயன்படுத்துவதற்கு அல்லது புதிய கருத்துகளைக் குறிப்பதற்குத் தேவையான சொற்களை உருவாக்குவதும் அந்தக் குழுக்களின் பொறுப்புகளாகும்.

தலைமையமைச்சரின் கட்டளை கண்டிப்பாகக் கடைப் பிடிக்கப்படுமானால் கருவூல (நிதி) அமைச்சின் நடை பாதைகளில் பெரிதும் பயன்படுத்தப் படுகிற லே கிராசு, லே பூம், லே ஆட் மணி, லே மார்க்கெட்டிங், லே மானேசுமெண்ட் என்பன போன்ற சொற்கள் மறைந்து விடும்.

வெளியுறவு அமைச்சில் பயன்படுத்தப்படும் சொற்களில் லே லீடர், லே பிரீவிங் என்னும் சொற்கள் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்படும்.

உள்துறை அமைச்சின் அதிகாரத்திற்கு உட்பட்ட காவல் துறையினர் லே கேங் சுடர்சு, லே ஒல்டப், லே கிட் நாப்பிங் என்னும் சொற்களையெல்லாம் மறந்து விடவேண்டியிருக்கும். இளையர் சோலி, விளையாட்டுகள் ஆகியவற்றிற்குரிய அமைச்சு லே மேட்ச், லே புட்பால், லே ரிங் என்னும் சொற்களைக் கைவிட்டு வேறு சொற்களைப் பயன் படுத்த வேண்டியிருக்கும். வேறு சொற்களைக் கண்டு பிடிப்பதில் அதற்கு, ரக்பி ஆட்டக்காரர் என்றும் டென்னிசு ஆட்டக்காரர் என்றும் பெயர் எடுத்துள்ள தலைமை அமைச்சர் உதவி செய்யக்கூடும்.

அரசினர் பள்ளிகளில் சாப்பாட்டுப் பட்டியலிலிருந்து லே சாண்ட்விச், லே ஆம்பர்சர், லே ஆட்டாக், லே சுநாக் என்னும் சொற்கள் அகற்றப்படும்.

நாயகரும் கவனமாகப் பேச வேண்டியிருக்கும்

நாட்டின் நாயகர் (அதிபர்) பாம்பீடுவும் பொது இடங்களில் தாம் பேசும்போது கவனமாகப் பேச வேண்டியிருக்கும், சென்ற ஆண்டு அமெரிக்க டாலர் நாணயத்தைக் காப்பதற்காக அமெரிக்க நாயகர் நிக்சன் மேற்கொண்ட நடவடிக்கைகளை, லே பிக் சுடிக் (வல்லடி, அஃதாவது வலிமையைக் காட்டும் நடவடிக்கை) என்று திரு. பாம்பீடு குறிப்பிட்டார். இனி அவர் இந்தச் சொல்லைக் கைவிட வேண்டியிருக்கும்.

புதிய சொற்களை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள சொல்லாக்கக் குழுக்களில் அமைச்சுகளின் அதிகாரிகளும் பிரஞ்சு மொழியைத் தூய்மைப்படுத்தி வளம்பெறச் செய்வதற்குரிய சிறப்புத் தகுதிவாய்ந்தவர்களான வாணிகத் தலைவர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

புதிய சொற்களை உருவாக்கும் வேலை நடைபெறும் போது புகழ்பெற்ற பிரஞ்சுக் கலைக் கழகத்தின் உதவி நாடப்பெறும். பிரஞ்சு மொழித் தூய்மையைக் காப்பது அந்தக் கழகத்தின் நிலையான பணியாக இருந்து வருகிறது. வேலையை விரைவில் தொடங்கத் தலைமையமைச்சர் விரும்புகிறார் என்றும், அதனால்தான் அவர் உதவிசெய்வதற்கு மேற்பட்ட திட்டவட்டமான பணியை இந்தக் கழகத்தின் உறுப்பினர்களான பேரறிஞர்களிடம் (40 பேர்) ஒப்படைக்கவில்லை என்றும் இங்குள்ளவர்களில் ஒரு சாரார் கருதுகிறார்கள். பிரஞ்சு மொழியின் புதிய அகரமுதலி யொன்றை உருவாக்க முற்பட்டுள்ள இந்தக் கழகத்திற்கு, 'சி' என்னும் எழுத்துவரை உள்ள சொற்களைத் தொகுப்பதற்கே 37 ஆண்டுகள் ஆகியுள்ளன!

மேற்கூறிய சொல்லாக்கக் குழுக்களால் ஆங்கிலச் சொற்களுக்கு நேரான பிரஞ்சுச் சொற்கள் உருவாக்கப்பட்டு விட்டால் பிரஞ்சு மொழியில் உள்ள கலப்படத்தை ஒழிப்பதற்காக அரசினரால் அமைக்கப்பட்டுள்ள மற்றொரு குழு (இது பிரஞ்சு மொழியைக் காத்து விரிவு படுத்துவதற்குரிய சிறப்புக் குழுவாகும்) அந்தச் சொற்களை அன்றாட நடைமுறைக்கு ஏற்ற வகையில் ஒருமுகப் படுத்தும்.

பின்னர் அந்தப் புதிய சொற்கள் ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா, அமெரிக்கா ஆகியவற்றில் வாழ்கிற பிரஞ்சு மொழி பேசும் மக்களான இருபது கோடி மக்களுக்கு வழங்கப்படும்.

ஆனால் சொல்லாக்கக் குழுக்களில் உள்ள அறிஞர்கள், எளிதில் புரியாத சொற்களைப் பொறுக்கி எடுத்து விடுவார்களோ என்பதுதான் பிரஞ்சுப் பொதுமக்களின் உள்ளத்தில் நிலவும் ஐயப்பாடாக இருக்கிறது.

(நன்றி. தமிழ் முரசு–மலேயா)

சில கலைச்சொற்கள்

இல. க. இரத்தினவேல்.
(பூதநூல் விளக்குநர், பெரியார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி)

ஈரெண் சிறப்புகளை* இயல்பாயுடைய உலக முதற் செம் மொழியான தமிழினின்றும் கிளைத்த ஏனைய மொழிகள் பலவும் சொல்வளப்பம் மிக்கு அறிவியன் மொழிகளாய் மிளிர்கின்றன. ஆயின், தமிழில் அறிவியலைப் பயிற்ற முடியுமா என்று இன்னும் வாய் வாளாது உரைப்போர் கணக்கிலடங்கார். மூவாயிரம் யாண்டு களுக்கு முன்னரே சிறந்த அறிவியன் மொழியாய் ஒளிர்ந்த தமிழை நாம் போற்றுதுதானிருந்தோம். அது, தமிழன் குறையே யன்றித் தமிழின் குறையன்று. மொழி ஒரு கருவி தானே! 'கருத்தா யின்றிக் கருவி யென் செயும்?"

நறுந்தமிழ்ச் சொற்கள் அறிவியற் சொற்களாய் இலங்கு மாற்றைத் தொகுத்து வரைகிறேன். ஆசிரியரும் மாணவரும் ஆய்க,

கருவி நூற் பட்டியல்

திரு. ஞா. தேவநேயப் பாவாணர் எழுதியவை

1. The Primary Classical Language of the world
2. முதல் தாய் மொழி
3. வடமொழி வரலாறு
4. தமிழ் வரலாறு
5. வண்ணனை மொழிநூலின் வழுவியல்
6. பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும்
7. ஒப்பியன் மொழிநூல் முதல் மடலம்-தமிழ்
8. உயிர் மெய்ம்முதல் வேர்ச்சொற்கள்-'செல்வி"

பிற நூல்கள்:

1. Chamber's Twentieth Century Dictionary
2. Chamber's Technical Dictionary
3. Encyclopaedia Brittanica.

---

* அன்னைத் தமிழின் அருஞ்சீர் பதினாறு

தொன்மை முன்மை எண்மை ஒண்மை
இளமை வளமை தாய்மை தூய்மை
செம்மை மும்மை இனிமை தனிமை
பெருமை திருமை இயன்மை வியன்மை
எனவரும் தமிழின பதினறு சிறப்பே!

குறுக்க விளக்கம்

E-English; **F**-French; **G**-German; **GK** Greek; **L**-Latin Sans,-Sanskrit; Hind-Hindi, Hindustani.

1. எல்–சூரியன் (கடவுள்)

உலகம் முதலாய கோள்களின் இயக்க மையம் சூரியன். உலகுக்கு ஒளியூட்டிப் புரக்கும் செஞ்சுடரோனின் நிறம் சிவப்பு. தமிழில் சூரியனுக்கான ஓரசைச் சொல் "எல்"

பொழுதும் எல்லின்று (குறுந்தொகை 161)

உலகம் முதலாய கோள்களை மட்டுமின்றி அவற்றின் உயிரினங்கள் யாவற்றையும் கட்டுப்படுத்திப் புரக்கும் இறைப் பேராற்றலை விண்சுடரான எல்லின் பெயராலும் நிறத்தாலும் குறித்து வணங்கினான், தமிழன் தலைமைக்கிழமை நாளை ஞாயிறு என்றான்; இறைவனைப் போற்ற ஞாயிற்றைப் போற்றினான்.

எல் - எர் - இர் - அர்
அல் - அர் - அரண் = சிவன்
அர் - அரக்கு = செம்மெழுகு
அர் - அரத்தம் = செந்நீர் (குருதி)
- அரத்தன் = செவ்வாய் (Mars)
அர் - அருணம் = சிவப்பு, சிந்தூரம், செம்மறி
- அருணம் = அருணன் = எழும் செங்கதிரோன்
அருணமலை = தீப்பிழம்பாய் நின்றதாகச் சொல்லப்படும் [மலை

அருண மலைச்சிவனும் சூரிய நிறத்தவனே; வள்ளலாரின் சுடர் வழிபாட்டு முறையும் பழந்தமிழரின் கொள்கையே!

ஏனைய நாட்டார் பொதுவாக இறைவன் எனக் குறித்ததை, இறைத்தன்மையைத் தெற்றென உணர்ந்த தமிழ்ச் சான்றோர் சிவன் என்றனர். இதனாலன்றோ, மணிவாசகரும் 'தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!' என நயம்பட நவிலா நின்றார்.

கடவுளைக் குறித்த தமிழ் எல் (= சூரியன்), பினீசியர், சாலடியார், பாபிலோனியரால் "எல்' 'எலியன்' என்றும்; கிறித்துவமுன்னோரால் 'எல்; 'எலோகிம்; 'எல்சடை, யென்றும்; அராபியரால் 'அல்லா,

(எல்-அல்–அல்லா) யென்றும் மருவி வழங்கப்பெறலாயிற்று. உரோமரும் 'ஒளி வடிவினனான தந்தை' (Jupiter) எனத்தம் இறைவனைக் குறித்தமையும் 'எல்' என்ற சொல்லின் பொருளே யன்றோ?

I. 1 (அ) Helium - எல்லியம் (2) *

இதன் வேர். GK. Helio

தமிழ் மூலம்: எல் - GK. helio

எல், கிரேக்கத்தில் helio என வாயிற்று. எனவே Helium என்னும் தனிமத்தை 'எல்லியம்' என வழங்குதல் தானே முறை!

எடுத்துக்காட்டு: heliocentric-எல்மைய

I. 2. Rubidium — அர்பிமம் (37)

I. 3. Rhodium — அரத்தியம் (45)

இ. வே: L. Rubidius; Gk: Rhodon = rose

த. மூ: அர்—அரத்தம் = செந்நிறம், குருதி

— Gk. erythros

— Sans Rukta — E rudd, red

— L. rufus, rubens, rubidius, E, ruby.

நிறமாலையில் இரு செவ்(rubidus)வரிகள் உள்ள மாழை அர்பிமம் (Rubidium)

செந்நிற [Rose coloured - Gk. rhodon] உப்புகளாய் உருவாகும் மாழையை அரத்தியம் [Rhodium] எனக் கூறலாமே!

I. 4. Chromium—குருமியம் (24)

இ. வே: Gk. Chroma

த. மூ. உல் - குல் - குரு

உரு - குரு = (செந்) நிறம்

உருத்தல் = அழலுதல்; சிவத்தல்

தொன்மூது பழங்காலத்தில நிறம் என்றது செந்நிறத்தையே குறித்தது.

குருஉச் சுடர் [ப. பாலை. 112]

குருவுங் கெழுவும் நிறனாகுமே [தொல்: உரி]

---

* பிறைக்கட்டுள் உள்ள எண், அணு எண்.

உரு - குரு - குருதி = அரத்தம், சிவப்பு, செவ்வாய்.
குரு [= நிறம்] — Gk. Chroma; E. Chrome

சீரிய நிறங்கொண்ட கூட்டுப் பொருட்களை உடைய 24-ஆம் தனிமத்தைக் குருமியம் என்க.

உயிரியலில் வரும் நிறமிகளான X - Chromosome, Y - Chromosome என்பவற்றை எ - குருமி, ஒ - குருமி எனலாம்

குரு [=செந்நிறம்] >E. Coral. L- Corallium
[G. Korallion.

I. 5. Copper - செம்பு (29)

இ. வே: Cyprus - L. Cuprum
த. மூ: செம்பொன் - செம்பு - செப்பு

செப்பு மிகுதியாய்க் கிடைத்த நாடு செப்பறை [>Cyprus]த்தீவு செப்பறைத் தாது [L. Al. Cyprium] cyprium எனக்குறுகி, cuprum எனத் திரிந்தது; இதனின்றும் மருவியதே copper ,

சகரமும், ககரமும் தமக்குள் தாமே மருவுதல் உண்டு.
ஒப்பு நோக்குக: சாவி - As. Ceaf, E. Chaff
D. Kaf, G. Kaff
சிக்கன் - E, Chicken, L. Kiken,
சக்கரம் - Gk. Kuklos, E. cycle

செப்பறைத் தாது cuprum ஆனது இடவாகு பெயர் [Metonym] cuprum-முக்கும் copper ருக்கும் உள்ள தொடர்பை விட 'செப்பறை' க்கும் cyprus - க்கும் உள்ள நெருக்கம் மிகுதி.

I. . Praseodymium—பசியம் (59)

இ. வே. Gk. prasios + didymos
த. மூ. புது - புசு - பசு - பசுமை
பசிய ▷ Gk. prasios (= leek green) E.prase
ஒ. நோ. படி - Sans. prati
இசி [வு]—Gk. itis (inflammation as in carditis)

"இரட்டியத்தில் ["didymium"] இருந்து பிரிக்கப்பட்ட பசிய உப்புகள் கொண்ட மாழையே பசியம் [praseodymium]

1. 7. Thallium—தளிரம் [81]

இ. வே: Gk. Thallos

த. மூ: துள்—துளிர்—தளிர்

தளிர் > Gk. Thallos [budding twig]

தன் நிறமாலையில் தளிர் = [Gk. Thallos]ப் பச்சை வரிகள் கொண்ட தனிமத்தைத் தளிரம் என்னுமல் வேறென் சொல்வது?

இங்ஙனமே நிலத்திணை [செடி] நூலுள் Thallophyta என்பதைத் தளிர்ப்பயிர்கள் எனலாம்.

1. 8. Iron—இரும்பு (26)

இ. வே: AS. Iren

த மூ: இர்—இரு—இருமை = கருமை

கருமை நிற மாழை 'இரும்பொன்' எனப் பெற்றது.

இரும்பொன் [கரியதாது]-இரும்பு > AS iren, E. iron

1. 9. Carbon—கரி(6)

இ. வே: L. Carbo

த. மூ. கள்-கர்-கரு-கருள் ≈ இருள்

-கரி (கரிய நிறம்; இருளின் நிறம்)

கரி > L. Carbo = E. Char [coal]

1. 10. Krypton-கரப்பன் [36]

இ. வே: Gk. Kryptos

த. மூ. -கள்-கர்-கர-கரப்பு

கருமைக் கருத்தில் மறைவுக் கருத்துத் தோன்றும். கரப்பாடும்மே [குறுந். 9:8]

கரப்பு [≈ மறைப்பு] > Gk. Kryptos, E. Crypto

ஒ. நோ: கரியன் [= காரி]-Gk. Kronos

கிளை—Gk; Klados

காற்றில் கரந்திருந்த இவ்வளிமத்துக்குப் பொருத்தமான பெயர் தான்!

1. 11. Silver — சுல்லு (= வெள்ளி) [47]

இ வே: As. Seolfor

த. மூ: உல்-சுல்-சுல்லு — வெள்ளி.
சுல்லு > As. Seolfor; E. Silver.

1. 12. Aluminium — அளமியம் (13)

இ. வே: L. Alumen
த. மூ: அளம்
அளம் > L. Alumen, E. Alum [a mineral salt]

வயவர் அம்பிரி தேவி [Sir Humphrey Davy] இம்மாழைக்கு அளமியம் [Alumium] எனவே பெயரிட்டார். இற்றை அமெரிக்க வழக்கும் இஃதே. இருப்பினும் இலத்தீனின் மேன்மைநோக்கி Aluminium [—L. Alumen] எனப் பின்னர்ப் பெயர் சூட்டப் பெற்றது.

(தொடரும்)

'தென்மொழி' தாளிகையின் வெளியீட்டு அறிக்கை.

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956, 19 ஈ(ஆ) வகுப்பு, 8-ஆம் கட்டளைப்படி)

1. வெளியிடும் இடம்: கடலூர்-1.
2. காலமுறை: திங்கள் ஒருமுறை.
3. அச்சிடுவோர் பெயர்: மா. தாமரை.
   இனம்: தமிழர்.
   முகவரி: தென்மொழி அச்சகம், கடலூர்-1.
4. வெளியிடுவோர் பெயர்: திரு. பெருஞ்சித்திரன்.
   இனம்: தமிழர்.
   முகவரி: தென்மொழி அச்சகம், கடலூர்-1.
5. ஆசிரியர் பெயர், முகவரி: திரு. பெருஞ்சித்திரன், கடலூர்-1.
6. ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும்: திரு. பெருஞ்சித்திரன், கடலூர்-1.

பெருஞ்சித்திரனாகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று இதன்வழி உறுதி கூறுகின்றேன்:

1—3—72
கடலூர்-1.

-பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்)

மக்களவை

ம: 132 தமிழைப் பழித்த வாய் மன்னிப்புக்கேட்டது!

பெருந்தகையீர்! வணக்கம். தங்கவயல் மாரிக்குப்பம் பகுதியில் மைசூர் சுரங்க உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் அவர்கள் அப் பள்ளி மாணவர்களிடம் வகுப்பு நேரத்தில் "தமிழைப்படிக்காதே; தமிழில் என்ன இருக்கிறது? தமிழைப் பொட்டணங்கட்டி மூலையில் போடு; சமற்கிருதம் படியுங்கள்; சமற்கிருதத்திலிருந்துதான் தமிழ் பிறந்தது" என்று துடுக்காகக் கூறியுள்ளார். அதைச் செவியுற்ற மாணவர்கள் பள்ளி செல்லாமல், "தலைமையாசிரியர் விளக்கம் கூற வேண்டும் இல்லையெனில் மன்னிப்புக் கேட்கவேண்டு"மென்று பள்ளி நிறுத்தம் செய்தனர். இதைச்செவியுற்று உ.த.க. உறுப்பினர்களும் மற்றும் தமிழ்மன்றங்களும் இணைந்து ஆசிரியரை நேரில் கண்டு அவரிடம் ஒரு மன்னிப்புமடலும் பெற்றுள்ளோம். அம்மடலில் (ஆங்கிலத்தில்)" நான் தமிழைப்பற்றி இழிவாகப்பேசியது தவறு; இனி அவ்வாறு தமிழைப்பற்றிப் பேசமாட்டேன்; யான் செய்தது தவறு என்பதை உணருகின்றேன்". என்று எழுதித்தந்துள்ளார். தமிழைப் பழித்த அவரை எச்சரித்து வெளியிட்ட அறிக்கை இம்மடலுடன் அனுப்பியுள்ளேன். ஐயா அவர்கள் தென்மொழியில் இந்நிகழ்ச்சியை வெளியிட வேண்டுகின்றேன்.

—த. அன்பிற்கரசு, மாரிக்குப்பம் அஞ்சல், கோலார், த.வ.

ம: 133 திரு. வி. க. உருவைப்புத்திட்டம்!

செய்தித் தமிழ் வளர்த்த திரு. வி. க. விற்குத் திருவாரூரில் சிலை அமைக்க ஏற்பாடு செய்துவருகிறோம். அதில் தமிழ் மக்கள் பங்குணர்ச்சிபெறக் கீழ்க்கண்ட செய்தியைத் தங்கள் இதழில் வெளியிட வேண்டுகிறோம்.

'தமிழர்களின் பலதுறைப் பொது முன்னோடியாகிய திரு. வி. க. விற்குத் திருவாரூரில் சிலை அமைக்கக் குறன்க்குடி

அடிகளார் தலைமையில் இயற்றமிழ்ப் பயிற்றகம் ஒரு குழு அமைத்தியங்குகின்றது. அதற்குத் தமிழ் மக்கள் தங்கள் பங்கின் வரிக் கொடையாகப் பொருளுதவி செய்யவேண்டுகிறோம். 'பொருளாளர், இயற்றமிழ்ப் பயிற்றகம், திருவாரூர்' என்ற முகவரிக்குப் பொருள் கிடைத்ததும் உடனே பற்றேடு அனுப்பப்படும்.'

—புலவர் த. சரவணத்தமிழன், செயலர்
திரு. வி. க. உருவைப்புத்திட்டம்
இயற்றமிழ்ப் பயிற்றகம், திருவாரூர்.

ம: 134 தமிழக அரசு தடை செய்யுமா?

அன்புடையீர்! பார்ப்பனரின் குறும்புகளில் வீழ்ந்திருந்த தமிழகம் சற்று தலைநிமிரத் தொடங்கியுள்ள இந்நேரத்தில், நாம் மற்றோர் எதிர்ப்பையும் எதிர்நோக்க வேண்டியவர்களாய் உள்ளோம். மாணவர்களிடையே குறிப்பாகக் கல்லூரி மாணவர்களிடையே 'தேன்கிண்ணம், மதுக்கிண்ணம், கொய்யா, கோமகள்....' இப்படி பல இதழ்கள் நடமாடத் தொடங்கியுள்ளதைத் தனித்தமிழன்பர்களில் ஒரு சிலரேனும் அறிந்திருப்பார்கள் என எண்ணுகின்றேன். [மாணவர்கள் மட்டுமின்றி மற்றவர்களும், இவ்விதழ்களுக்கு இரையாகி விட்டனர் என்றே கூற வேண்டும்]. இவ்விதழ்களின் தரத்தை எப்படி எழுதுவதென்றே புரியவில்லை– எழுதினாலும் 'தென்மொழி' இடங்கொடுக்காது! அவ்வளவும் அருவருப்பு..........! இது போன்ற இதழ்கள் இன்றுகாறும் தமிழகத்தில் தோன்றியதில்லை. 'பொழுது போக்கு இதழ்கள்' என்ற பெயரில் இளஞ்சிறார்களின் வாழ்க்கையையே வீணடித்துக் கொண்டிருக்கின்றனர், இவ்விழிதகையாளர்கள்!

இவ்விதழ்களை ஒரு சில ஆளுங்கட்சியைச் சேர்ந்த 'பெரிய' மாந்தர்களும், ஆரியக்காமுகர்களும் தொடங்கியுள்ளனராம்! இளஞர்களிடையே காணப்படும் மனநெகிழ்ச்சியைப் பயன் படுத்தித் தங்களை வளப்படுத்திக் கொள்வதோடல்லாமல் அவர்களைக் காமச் சேற்றில் அழுத்திக் கொண்டிருக்கும் இவர்களை நோக்கின், வணிக நோக்கு மட்டுமின்றி வேறொரு மறைமுக நோக்கும் இருக்க வேண்டும் என்றே எண்ண வேண்டியுள்ளது. ஒரு வேளை தமிழகத்

தையும் மேலை நாடுகளைப் போல மாற்றிவிட வேண்டும் என்பது இவர்களின் தணியாத ஆர்வமாயிருக்கலாம்!

ஆரிய இதழ்களைப் படித்தே தன்நிலை மறந்திருக்கும் மாணவருலகமும், பிறவும் இவ்வாறு திசை திரும்பிக் கொண்டிருப்பதைக் காணுங்கால் நெஞ்சாங்குலை வெடித்துவிடும் போலுள்ளது! மாணவர்கள் இவ்விதழ்களால் எவ்வள்வு வேகத்தில் கெட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பதை என் போன்ற மாணவர்களே அறிய இயலும். இவ்வேகத்தைப் பயன் படுத்தி நாளொன்றுக்கு ஓர் இதழாக இப் பேயர்கள் தொடங்கிய வண்ணமாக உள்ளனர்! பாடப் பொத்தகங்களைக் கூட மறந்து விட்டு (ஒருவேளை அப்படியிருந்தால் அவற்றினிடையே இவ்விதழ்களை மறைத்து வைத்துக் கொண்டு) திரியும் மாணவர்களை என்னவென்று கூற? சுருங்கக் கூறின் இவ்விதழ்களை விட 'குமுதம்', 'ஆனந்தவிகடன்' போன்ற ஆரிய இதழ்களே மேல் என்று நினைக்கும் படியாகி விட்டது!

எனவே இம்மடலைக் கண்ணுறும் தனித்தமிழன்பர்களும், உ. த. க. கிளைகளும், பிற அமைப்புகளும் உடனே இவ்விதழ்களைத் தடை செய்யுமாறு தீர்மானம் நிறைவேற்றி தமிழக அரசுக்கு விடுக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். இதழ்களைத் தொடங்கியவர்கள் 'பெரிய' மாந்தர்களாதலால் எதிர்ப்பிருக்கலாம்! பகையை எதிர் நோக்கிப் பணியை மேற்கொள்ளுங்கள்!

அன்புள்ள

கோ. அரிமாநெஞ்சன்,

மீனம்பாக்கம், சென்னை-61

ம: 135 சுந்தரவடிவேலனார் செய்தது சரியா?

அன்பும் அருளும் மிகக்கொண்ட ஐயா அவர்கட்கு! வணக்கம். 3—3—'72 அன்று புதுவைத் தமிழ்க் கழகத்தால் [சங்கம்] ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் பேசுதற்கு திரு எழில்வடிவேலனார் [நெ. து. சுந்திரவடிவேலனார்] வந்திருந்தார். அக்கால் மேடையிலிருந்த அவரிடம் கடந்த சுவடி: 8, ஓலை 1-2-இல் தென்மொழியில் தாங்கள் எழுதியிருந்த ஆசிரியவுரையைக் காட்டி "சுந்தரவடிலேனார் சொன்னது சரியா?" என்ற வினவுக்குத் தம் உரையில் விடை

தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அவரும் தம் பேச்சுக் கிடையே விடையிறுப்பதாக ஒப்புக்கொண்டார் பின்னர் தம் உரையின்போது தமக்கும் திரு அண்ணாத்துரைக்கும் இருந்த நட்பின் கரணியத்தால் தம் வாழ்க்கையின் தொடக்கத்திலிருந்து, அஃதாவது படிப்பு, அலுவல், மனம், கொள்கை, சம்பள நாட்டம், என்று பல்வேறு கட்டங்களில் அண்ணாத்துரையால் தாம்புகழப்பட்ட வரிகளை அனுவிடாமல் "தற்பெருமைக்காக கூறுவதாகக் கருதக்கூடாது!" என்று கூறிக்கொண்டே ஒரு மணி நேரம் பேசினாரே தவிர, இறுதி வரை ஒரு சொல்லால் கூட நம் தென்மொழியில் விடுக்கபபட்ட வினாக்களுக்கு அவர் விடை தரவேயில்லை. அரசியல் பேசும் இந்த அரசு அலுவலருக்கு தம் கல்வித்துறை அலுவல் தொடர்பாகக் கடாவிய வினாக்கட்கு விடையளிக்க இயலாமை எள்ளத்தகுந்தது. பொறுப்பற்ற இத்தகு புல்லியோர்தம் வெள்ளறிவால்தான் தமிழ் ஆராய்ச்சி செய்யும் மொழிஞாயிறு பாவாணர் மக்கள் கண்களிற்பட வில்லை; தொண்டும் தமிழ் மறமும் கமழவரும் தென்மொழி அவர் கைகட்கெட்டவில்லை; இன்னோரைக் கண்டித்துப் புறந்தள்ள வேண்டிய காலம் – விடுதலைக்காலம் – விரைவில் வரும்!

—கி. அரிமா மகிழ்கோ – புதுவை–1

ம: 136 உலகத் தமிழரை ஒன்றுதிரட்டுக

ஐயா அவர்கட்கு, இத்திங்கள் தென்மொழி கண்டோம். காய்தலிலும், வைதலிலும், புகழ்தலிலுமே தென்மொழி நிரம்பி இருந்தது. நம்மவர்க்கு ஒரு பழக்கம், வைத்தால் கோபுரத்தின் உச்சியிலே வைப்பார்கள் இன்றேல் குப்பை மேட்டிலே தூக்கி எறிந்து விடுவார்கள்.

தாங்கள் உண்மை இறைபற்றி எழுதுவதில் தவறில்லை. ஆனால், மார்க்சியத்தை ஆழ்ந்து படியுங்கள். தமிழ் இனத்தின் – நாட்டின் வல்லடிமை மாய்க்க அதன் தேவை மிகுதி.

தென்மொழியில், நம் இன எழுச்சி — தாயக விடுதலை குறித்த படைப்புகள் நிறைய வெளிவரல். வேண்டும். ஆசிரிய வுரையில் தாங்கள் குறித்துள்ள கரணியங்களை மட்டும் முன்வைத்து நாம் விடுதலை பெற்றுவிட முடியாது; நம்மவரை ஒன்று திரட்டி

விடவும் முடியாது. தாயகம் விடுதலை பெறவேண்டுமெனில், முதற்கண் உலக முழுவதும் பல்கி வாழ் தமிழரை ஒன்று திரட்டவேண்டும் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்!

அன்புள்ள

அறிவுடைநம்பி, இரணியன், வேலவன், சி.அ.க. கல்லூரி-திருப்பூர்-2

ம: 137 தமிழக விடுதலைக்கே எழுதுக!

பெருந்தகையீர்! வணக்கம் தென்மொழியில் வெளியான ஆசிரியவுரைகளைக் கண்டு [கடந்த சில இதழ்கள் மட்டும்] தென்மொழியின் மீது கொண்டுள்ள பிடிப்பு சற்று தளர்வுற்றிருந்த என்போன்ற தென்மொழி அன்பர்களை, "மொழியடிப்படையில் தனித்தமிழ்க் கொள்கையையும் அரசியல் அடிப்படையில் தனித்தமிழ் நாட்டுக் கொள்கையையுமே தன் தலையாயக் கொள்கைகளாகக் கொண்டுள்ளதென்மொழி", என்ற சுறவத்திங்கள் ஆசிரிய உரை வரிகள் உணர்வு பெற்றுச் செயல்படச் செய்துள்ளன. தென்மொழிப் போர்க்கில் ஐயுற்றுச் சோர்வுற்றிருந்த என்போன்ற அன்பர்களை மீண்டும் தென்மொழிப்பணிக்கு ஈர்த்த பெருமை சுறவத்திங்கள் தென்மொழிக்கு உண்டு. தங்களை வேண்டிக் கொள்வதெல்லாம் மக்கள் நல்வாழ்வுக்குப் பயன்படும் வண்ணம், தமிழக விடுதலைக்குப் பயன் தரும் வண்ணம் தொடர்ந்து ஆசிரியவுரைகள் எழுத வேண்டும் என்பதே. இதை விடுத்து இறைப் பேராற்றல் போன்றவை குறித்து எழுதப்பெறும் ஆசிரியவுரைகள் பயனற்றவையே! அருள் கூர்ந்து தமிழக விடுதலைக்கு நீருற்றி வளர்க்க வேண்டுகிறேன்: என்போன்ற ஆயிரமாயிரம் அன்பர்கள் தங்களிடம் எதிர்நோக்குவது தமிழக விடுதலைக்குத் தாங்கள் தலைமையேற்று வழிநடத்த வேண்டுவதே.

—அரங்க-திருமாறன், உரத்தநாடு.

ம: 138 தென்மொழி இறைக் கொள்கை

பேரருள் மிக்க பாவலரே, வணக்கம் செந்தமிழ் நாட்டில் தனித்தமிழ் என்ற குழந்தைக்குப் புத்துயிர் அளித்து மறுபிறவியை கொண்டு வந்தது தென்மொழி இதழ்தான் எனக்கூறினால் அது மிகையாகாது. தென்மொழி தனது மொழிக்கொள்கை, பொருளியல் கொள்கை, கடவுள் கொள்கை, அரசியல் கொள்கை இன்ன பிற துறைகளில் தனது குறிக்கோள், வழிகளை விளக்கிப் பல கட்டுரைகள்

தீட்டியுள்ளது: யான் தென்மொழியின் கடவுட்கொள்கையைப்பற்றி எனது கருத்தை எழுத விழைந்தே இம்மடலைத் தீட்டியுள்ளேன்.

தென்மொழியின் காதலர்கள் - சுவைஞர்கள் நல்ல தமிழ் உணர்வு கொண்டவர்கள் என்பது பொது உண்மை. இந்தச் சுவைஞர்களில் சிலர் "இறைவனே இல்லை" என்ற கடவுள் மறுப்பு கொள்கையர்கள் ஆவர். மறுபுறம் உள்ளவர்கள் "இறைவன் உண்டு" என்ற கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் ஆவர். கடவுள் மறுப்புக் காரர்கள் தென்மொழியை ஓர் இறை மறுப்பு ஏடாக மாற்ற விருப்பு கின்றனர். இது தவறு அன்று. அதே சமயத்தில் தமிழர்கள் யாவரும கடவுளை மறுத்தால்தான் உண்மைத் தமிழர்கள் பகுத்தறிவாளர்கள் என்று கருதுவதும் சரி அன்று. மறைமலையடிகளார், திரு. வி. க போன்ற பெரியோர்கள் கடவுள் நம்பிக்கையுள்ளவர்களே. இவர்கள் இருவரும் சிறந்த அறிஞர்களே. இவர்களுக்குப் பகுத்தறிவு இல்லை என்பது பொய்ம்மையான கருத்தாகிவிடும். தென்மொழியின் கடவுட் கொள்கை நேர்மையானது என்பதே என் கருத்தாகும். "ஆயிரம் தெய்வங்கள் உண்டு என்று பேசி அலையும் அறிவிலிக் கொள்கை தென்மொழியின் கொள்கை அன்று ' உருவ வணக்கம் ஒப்போம் ஒரு கடவுள் உண்டு" என்பதே பாரதிதாசன் கொள்கையும் ஆகும். கடவுள் என்று நற்றமிழ்ச்சான்றோர்கள் அழைப்பது "அன்பு" என்ற நற்பண்பையும், "அருள்" என்ற பெரிய ஆற்றலையும் தான்! அன்பு, அருள், அறிவு போன்ற சிறந்த பண்புகளை இறைவனாகக் கொண்டு நம்பி, வணங்கி வாழ்வது அமைதியான உயர்ந்த நல்வாழ்வுக்கு வழிகோலும். ஆரியர்களது பொய் வேதங்கள், புராணங்கள், இருட் சாதி, தத்துவச்சாத்திரக் குப்பைகளைத் தென்மொழி இன்றும்மிகமிக வன்மையாக-ஏன் பெரியார் ஈ.வே.இரா.வை விட முடுக்கமாக-மூடக் கொள்கைகளை எதிர்த்து போரிட்டே வருகிறது. மூட நம்பிக்கைகளை ஒழிப்பதுடன் நில்லாமல் நல்ல நம்பிக்கையையும் (கடவுள் – அன்புக் கடவுள்) வளர்த்து வருகிறது. பெரியார், அண்ணா, புத்தர் போன்ற சீர்திருத்தக் காரர்கள் எப்படி இந்துமத அருவருப்பான மூடத் தனங்களை ஒழித்துக்கட்ட முனைந்தார்களோ அந்த அளவுக்குச் சற்றும் குறையாமல் தென்மொழி பணிசெய்கிறது. இது பிற தோழர்கட்குக் காலம் செல்லச் செல்ல விளங்கும்.

—த. நிலவன், ஆரணி.

ம: 139 கடமையைத் துணிந்து செய்யுங்கள்....!

கண்ணை மூடிய சிலர் திறக்க மறுக்கின்றார்கள்; கண்ணைத் திறக்காமலேயே பலர் திறந்து கொண்டதாகத் தருக்குகின்றார்கள்! ஒரு கூட்டம் உண்மை இறைநெறியை மறைக்கின்றது; மற்றொன்று அதனை நம்ப மறுக்கின்றது. இந்நிலையில் சீரிய இறைநெறியினைத் தாங்கள் பேசினால் சிலர் ஏசுகிறார்கள். உள்ளதைச் சொன்னால் எள்ளுகிறார்கள். மாசிலா நன்னெஞ்சினர்க்கு வன்நஞ்சு வார்க்க முனைகின்றனர். இனிப்பான உண்மையைத் தேடி அலைகின்றனர். எங்கிருக்கும் கசப்பற்ற உண்மை? பசப்புகின்றவர்களிடம் இருக்கலாம்(?); போய்ப்பெற்றுக் கொள்ளட்டும். சீறிக் கடல் ஞாலம் சேர்ந்தெதிர்த்து வந்தாலும் மாறுது, கூறி முழங்குங்கள் நம் கொள்கை! உள்ளீடற்ற கொள்கைகளை உலவவிடும் புலையர்கட்கு உலைவைத்து நிலைகலங்கச் செய்யும் ஒள்ளிய தெள்ளுதமிழ்க் கருத்துகளை வரையாது வழங்குங்கள்! தூற்றுவார் தூற்றட்டும்! அன்னாரும் போற்றுகின்ற நன்னாள் விரைவில் வரும்!

—சி. இராசாங்கம், தஞ்சை.

ம: 140 தனித்தமிழ் மறவர் படைவேண்டும்

செந்தமிழே! பாவலர் ஏறே! அன்பான கைகூப்பு. கடந்த இதழில் "மக்களவைப்" பகுதியில் (ம:130) திரு. முகிலன் அவர்களின் கருத்துரை கண்டேன். அவர் வரிகள் மிக உண்மை பொதிந்தவை. "வாள் வாளாக இருக்கும் போதுதான் வெற்றி நமதாக இருக்க முடியும்" எனும் அவர் நெஞ்சு என்னைப் பொறுத்த வரை நூற்றுக்கு நூறு உண்மை. விண்ணோடு விளையாடும் அறிவியலின் உச்சிக்குச் சென்றுவிட்ட இந்நாளிலும், பூநூலைச் சுற்றிக் கொண்டு, "தேவமொழியில்(!) உளறிக் கொண்டு ஊரை ஏமாற்றும் இப்பார்ப்பனரை வெறும் வாய்ப்பேச்சாலும், எழுத்தாலும் திருத்த முடியுமென்று நினைக்கிறீர்களா? (சுரணையற்ற நம்மினக் கோடாரிக் காம்புகளையும் உட்படுத்தித்தான் கூறுகிறேன்) முடிந்திருந்தால் இன்று நம்மவர் இந்நிலை எய்தியிருப்பாரா? உறுதியாக இல்லை. எனவேதான் துணிவுடன் பாராட்டுகிறேன். இங்குச் செங்குருதி ஓடாமல் செம்மை நிலை மலரப்போவதில்லை!.

எனவே நானும், முகிலனும், எங்களையொத்த பல்லாயிரக் கணக்கான தனித்தமிழ்க் களிறுகளும், ஆங்காங்கிருந்தபடி வெறும்

தூவலைத் தூறிக் கொண்டிருப்பதால் யாது பயன்? தண்டமிழை அரியணையேற்ற தங்கள் உளத்தையும், உடலையும் ஈகம் செய்ய முன்வரும் காளைகள் ஆங்காங்கே ஒன்ருக்கப்படல் வேண்டும். அவர் உடல்கள் எஃகையொத்தனவாக வலிவாக்கப்படல் வேண்டும். அதற்குத் தென்மொழியின் "மறவர் படை"யை மீண்டும் உயிரோட்டமுள்ளதாக்க வேண்டுகிறேன். தனித்தமிழர் மறவர்படையொன்று அமைத்தலே, நம் வெற்றியை விரைவாக்கும் ஏற்றமிகு வழியாம்.

தலைவ! இவையெல்லாம் தாங்கள் உணராதனவல்ல! எனினும் மறவர்படை விரைவில் துவக்கப்படல் வேண்டும் என்ற பேராவலே இதை எழுதத் தூண்டிற்று.

—குன்னத்தூர். ச. தம்பி, அறி.இ;இ. அ. கசுத்தூரிபாய் சிற்றூர்.

மः 141 இறைமறுப்பும் மறுப்பறுப்பும்!

அன்புள்ள ஐயா,

வணக்கம். கடந்த சனவரித் திங்கள் இதழில் மக்களவைப் பகுதியில் தங்களுக்குத் தஞ்சைப் பகுத்தறிவாளன் விடுத்துள்ள செய்தியினைக் கண்டேன். மலருக்கு அணிசெய்யும் மணமாக, உலாவரும் நூருசிரியத்தை அச்சிலேற்ற வேண்டா என அவர் விடுத்துள்ள வேண்டுகோளைக் கண்ணுறும்போது சிறிது மனத்தைத் துயரத்தில் தோய்த்துக்கொள்ள வேண்டியுள்ளது.

எந்தவகையில் இறைப்பற்ருல் தமிழரின் வாழ்வு இருளடைந்துள்ளது என்பதை அவர் தெளிவுற விளக்கியுள்ளாரெனினும், அதிலேயே மீண்டும் நமக்குச் சான்றுகளைக் கொடுக்கின்ருர். இறைப்பற்றை நடுவாக வைத்து எழுந்துள்ள இலக்கியங்கள் மற்ற மொழிகளைவிடத் தமிழ்மொழியிலேயே மிகுதி. 'கடவுள்' 'தேவு' என்ற சொற்களின் மூலத்தை ஆய்வு செய்யும்பொழுது, பழங்காலத் தமிழர்கள் எந்த அளவு கூர்ந்த நோக்கும், சீரிய கருத்தும் பெற்றிருந்தனர் என்பதை அறியலாம். உள்ளத்தைக் கடந்தவன் கடவுள் என்பதைத்தான் தாங்கள் 'எவன்கொல் அறிகும் இறையவன் கிடக்கை!' பாடலில் குறிப்பிட்டுள்ளீர்கள். இறைப்பற்று இல்லையெனின் இன்று தமிழில் இலக்கியமேது? இலக்கியமில்லையெனின் தமிழில் மொழி வளர்ச்சியேது? மொழிவளர்ச்சியில்லையெனின் இன்று 'இலக்கியக் கிடங்கு எம்மிடமே' எனத் தெம்மாங்கு பாடித்திரியும் தமிழினம் ஏது?

வாளுக்குப் பயன்படும் இரும்புதான் கேடயத்திற்கும் பயன் படுகிறது எனும் உண்மையைப் 'பகுத்தறிவாளன்' எளிதில் புரிந்து கொள்வார் என எண்ணுகிறேன். இறைவன் எல்லாருக்கும் பொது. ஆரிய இனம் இறைவனைத் தங்களுக்குக் கேடயமாகப் பயன்படுத்திக் கொண்டது; முன்னேற முடிந்தது. தங்களைக் கேடயத்தால் காத்துக்கொண்டு வாளால் பிறரை அழிக்கக் கற்றுக் கொண்டது. கற்றுக்கொண்ட பாடத்தை மாற்றானுக்குக் கற்றுத்தர மறுத்தது. அதற்காக ஆரிய இனத்தை வெறுக்கலாம். ஆனால் முன்னேற்றத் திற்கு உதவும் இரும்பை உதறுவது எங்ஙனம் பொருத்தமென்று அவர் எண்ணுகிறார்?

தமிழகம் இன்று ஆரியனையும் இறைவனையும்தான் இனம் கண்டுகொள்ள வேண்டும். இறையவன் தன்மை, என்று தமிழனால் முழுதும் அறியப்படுகிறதோ, அன்றே தமிழன் விழித்துக் கொள் வான். அந்தன்மையை அறிய தென்மொழிக் கட்டுரை மிக இன்றி யமையாததே! 'இறைவன் என்றதுமே நட்ட கல்லும், சாற்றுதற்கு நாலு புட்பமும், முணு முணுக்க ஒரு பார்ப்பானுமே யாவர்கண் முன்னும் தோன்றும்' எனும அவர் கூற்றை ஏற்றுக்கொள்வோம். ஆனால், அத்தகைய காட்சியை கண்முன் தோன்ற வைத்தவர் யார்? ஆரிய இனமில்லையா? இறைவன் என்றதும் அவனது ஒளிசிந்தும் முகமும் தெய்வீகத் திருவிளையாடல்களும் பணிகளும், எத்தனையோ உள்ளங்கள் முன் இன்றும் தோன்றிக்கொண்டிருக்கத்தான் செய் கின்றன. அத்தனை மாந்தரும் அத்தகைய (ஆரியனால் தோற்று விக்கப்பெற்ற) காட்சியைக் காண்பதில்லையே! இறைப்பொருள் ஒரு மறைபொருள். நாடோடி இனம் (ஆரிய இனம்) அதனைத் திரி பொருளாக(illusion)க் கற்பித்து விட்டது. இன்று அதே மக்க ளிடம் இறைவனின் உண்மை நிலையைக் கற்பித்து அவனின் தன்மையை உணர்வித்து உண்மையை ஏற்றுக் கொள்ளச் செய்ய முடியும். அப்பணியும் இக்கட்டுரை முகத்தான்தான் முடியும். தமிழன் நேரடியாக இறைவனை வணங்க முடியும்; தரகர் தேவை யில்லை எனும் உண்மை ஒளியை என்று தழிழன் பெறுகிறானோ அன்றே ஆரிய இனம் மறைந்து விடும். ஆனால் அதற்காக இறைத் தன்மை பற்றிக் கற்பிக்கும் திருத்தன்மை வாய்ந்த கட்டுரைக்கு ஏன் மறுப்புத் தெரிவிக்க வேண்டும்? மரத்திலிருக்கும் கனி முதிர முதிர காம்பு, தானே சிறுத்து விடும்!

தமிழினத்தின் அறிவு முதிருங்கால் ஆரிய இனம் அடங்கி ஒடுங்கிவிடும். இதற்காக ஏன் அங்கலாய்க்க வேண்டும் எனத் தெரிய வில்லை. மேலும் முன் பகுதியில் 'தருக்கத்திற்கேனும் இறையவன் உண்டு என்ற கண்ணோட்டத்துடன் நோக்கினும்......' என்பது போல் கூறிவிட்டுப் பின்பகுதியில் 'பார்ப்பானை ஒழித்தால் இறை வன் ஒழிந்துவிடும்; இறைவனை ஒழித்தால் பார்ப்பான் ஒழிந்து விடுவான்;' எனும் பெரியாரின் கூற்றுக்கு முட்டுக் கொடுக்கின்ற கரணியத்தையும் புரிந்துகொள்ள முடியவில்லை.

தனிப்பட்ட ஒரு குமுகாயத்தை, இடையில் பிறந்து வளர்ந்து விட்ட ஒரு குமுகாயத்தை, இறைவனை நடுவாக வைத்துக்கொண்டு தன்னை வளர்த்துக்கொண்ட வளர்த்துக்கொள்ளத் தெரிந்த ஓரினத்தின் பொய்ம்மைகளை அழிக்கத் தமிழனுக்கு ஆற்றலில்லை யென்றால் அதற்காக இறைப்பொருளை இல்லை என்று உரைப்பதா? இறைவன் அழிக்கப்பட வேண்டும் எனக் கூப்பாடு போடுவதா? இதனாலா ஆரிய இனம் ஒழிக்கப்பட்டு விடும். அடுத்து 'தாங்கள் கூறும் பேராற்றலை உணருபவர் எத்தனைப்பேர் உளர்?' என்ற வினாவினை எழுப்பியுள்ளார். ஆரியன் படிப்படியாகத்தான் தமிழனை அடிமைப்படுத்திக் கொண்டானேயன்றி ஒருமிக்க இல்லையே! சிறிது சிறிதாக அதுவும் தமிழன் பற்று வைத்திருந்த இறைவனைக் காட்டி அடிமைப்படுத்திக் கொண்டான். உண்ணுமல் பசிதீர வேண்டு மென்றால் உளப்பக்குவம் பற்றி ஓர் ஐயம் எழத்தான் செய்கிறது. டண்பட்ட உள்ளங்கள் எவ்வளவு உள்ளன என்று கேட்டுள்ளார். அத்தகைய உள்ளங்களை உருவாக்கினால்தானே முடியும். எத்தனையோ இலக்கக்கணக்கான உள்ளங்களை நூறுசிரியம் கவர்ந்து விடுமே! அதை மறுப்பது அறியாமையில்லையா? ஆகவே இறை யாற்றலின் மெய்யான தன்மை என்றைக்கு அறியப்பெறுகிறதோ, என்றைக்குத் தமிழன் அத்தகைய மனநிலையை அடைவானோ அன்றே ஆரிய இனத்தின் போலிப்பூசல்கள் ஒழிந்து விடும்; அதன்வழி ஆரிய இனமும் ஒழிந்தாற்போல்தான். அதற்கு நூறுசிரியம் பேருதவி செய்யும். அன்றே பகுத்தறிவாளன் எண்ணம் நிறைவேறிவிடும் என்று கூறிக்கொள்கிறேன்.

—ஆ. பாத்திமாநாதன், மாநிலக் கல்லூரி. சென்னை-5.

செ. சொ பி. பேரகரமுதலி

உருவாக்க, வெளியீட்டுத் திட்டம்.

உறுப்பினர் பட்டியல்

திருவாளர்கள்:-- 1. தாமரை பெருஞ்சித்திரன், கடலூர்-1, 2. மா. பூங்குன்றன், கடலூர்-1. 3. புலவர் இறைக்குருவன். மதுரை-10. 4. இறை. பொற்கொடி, மதுரை-10. 5. காளியப்பன், (நாராயணன்) நெய்வேலி-1. 6. செ. பன்னீர்ச்செல்வம், சென்னை-2. 7, த வளங்கோ, புதுவை-1. 8. செ. சித்தார்த்தன், அறி. இ. (பி. எசி.) சென்னை-25. 9. கி. மகிழ்கோ, புதுவை-5. 10. திருநாவுக்கரசு, பொ. இ. வேலூர்-9.

11. புலவர் சா. அடல் எழிலன், திருவையாறு. 12. ந. முத்துக் குமரன், அறி. இ. ஆ. ப. குளத்துப்பாளையம். 13. திருச்சி மாவட்டத்தான், 14. ந. செங்குட்டுவன், திருச்சி-14. 15. அருண்மொழியன், திருச்சி-14. 16. பொற்செழியன், (வே. நா. இரேணுகோபால்,) பெங்களூர்-1. 18. உணர்வுப்பித்தன், (ஆ. சொக்கலிங்கம்) திருச்சி-10 18. உளங்கவரழகன், இராசிபுரம். 19. நாவை-சிவன். (தமிழ்மகன்) கீரனூர். 20. ச. கலியமூர்த்தி, காவேரிநகர்.

21. .... 22. சி. பூ. மணி, பெங்களூர்-21. 23. க. அப்பாத்துரை, நடுப்பட்டி. 24. ச. சின்னத்துரை, நெய்வேலி-1. 25. அன்புவாணன், (த. கோவிந்தன்) நெய்வேலி-1 26. அ. அருள்நெறி, நெய்வேலி-2. 27 ஆ. கருப்பையா, நெய்வேலி-3. 28. இரா. அப்பாவு, நெய்வேலி-3. 29. இரா. பெருந்தேவன், நெய்வேலி-2. 30. மு. அறவாழி, நெய்வேலி-1.

31. பொன்-தமிழ்மாறன் (இராமசாமி), நெய்வேலி-1. 32. தமிழநம்பி, அறங்கண்டநல்லூர். 33. புலவர் பா. வீரப்பன், ஆனைமலை, 34. நா. இளமாறன், பெகும்பகல்லாக்குடியிருப்பு, 35 க. மலர்ச் செல்வன், (தலைராசன்) மதுரை-1. 36. பர். பொ. இளங்கோ, உக்காம். 37. செ. பெரிய நாடார், தெற்றுச்சூரன்குடி. 38. சே. கு. அரசங்கோவன். மேட்டூர் அணை-1. 39. ஞா. தாமசு, மணிமுத்தாறு. 40. கே. பூபதி, பெங்களூர்-16.

41. துரை. சம்பத்குமார், க. இ. ஈரோடு-1. 42. அறவாழி, தளவாய்ப்பட்டணம். 43. இல. க. இரத்தினவேல், திருச்சிராப்பள்ளி-1 44. சு திருஞானம், திருச்சிராப்பள்ளி-1. 45. ஆம்பூர் கே. ஏ. மணவாளன், பெங்களூர்-5. 46. இர. பரணன், பரணம். 47. மு. வ. பரமசிவம், நடுப்பட்டி. 48. .... 49. மு. திருநாவுக்கரசு, அண்ணாமலைநகர். 50. க. இராமசாமி, கோவில்பட்டி.

51. ஒ. பிச்சை, தெற்குத்தெரு, மேலூர். 52. இல. வேலரங்கன், சோமையனூர். 53 கெம்பீரம், பெங்களூர்-1. 54. செ. பெருமாள், கடத்தூர். 55 புலவர் வ. அரிஅரன், ஒண்டிப்புதூர். 56. ந. தேவராசன், வேலூர்-1. 57. க. செகநாதன், பி.எசி. ஈரோடு. 58. இராசமாணிக்கம், காரைக்குறிச்சிப்புதூர். 59. வெ. கிழார், பெங்களூர்-21. 60. சா. பொழிலன், நெய்வேலி-2.

61. கா.சே. சாத்தப்பிள்ளை, பி. எசி. பி. டி. ஆமூர். 62. புலவர். கா. இளமுருகன், புன்செய்ப்புளியம்பட்டி. 63. ப. கு. முருகவேள், புன்செய்ப்புளியம்பட்டி. 64. புலவர் நா. அருணன், எரங்காட்டுப்பாளையம். 65 பா. அறவாழி, சென்னை-7; 66 அ. வெள்ளிமலையார், திருச்சிராப்பள்ளி-8; 67 சாலை. இளந்திரையன், எம்.ஏ. எம். லிட், புதிய தில்லி-5. 68 .... 69. மூல்லைவாணன், சிங்கை; 70 ந. இராசகோபாலன், தஞ்சாவூர்–1.

71 அகத்தி கிருட்டிணன், இ. அ. (வேளாண்) சோளிங்கபுரம். 72 ஏ. கே. மணி, பி. இ, ஏ. எசு. எசு–1. பெங்களூர் 28 73 வே. ஐயனப்பிள்ளை, வேம்பனூர்; 74 வ. கௌரிநாதன், திருச்சி-14 75 எழிலரசன், திருச்சி-14 76 பொன்-தங்கவேலன், பெங்களூர்-15 77 தி. எழிலரசன், (இரமணி, மதுரை-3) 78 பொன்-மாறன், (இராமகிருட்டிணன்), மதுரை-3. 79 மறை-நித்தலின்பன், கோவை 80 தமிழ்க்கூத்தன், கருந்திட்டைக்குடி.

81 புலவர் ச. தமிழ்வேலன், மீனாட்சிபுரம். 82 அ. இளங்கோ பி. எசி. பி. டி. பெருமாம்பாளையம் 83 புலவர். த. மாணிக்கம், கூகலூர் 84 புலவர் திரு. மாரி. விசுவநாதன், வால்பாறை 85 பா. வளன் அரசு. க. மு. திருநெல்வேலி-2 86 கரு. பேச்சிமுத்து, திருச்சி 14 87 அ. சாமிக்கண்ணு, அரூர் 88 கே. அரசு பெங்களூர்-21, 89 ந. சுப்பையா, அருமடல்; 90 த. சுப்பிரமணியன், செட்டிக்குளம்.

91 த. வையாபுரி, ஆனைமலை; 92 எசு. கே. எசு. காதர், அம்பாலா; 93 இர. சு. கிருட்டிணன், கீழ்த்தென்குலம்; 94 அ. மீ. இராமமூர்த்தி, திருவாரூர். 95. வை. வேதையன். திருவாரூர். 96. த. சரவணத்தமிழன், திருவாரூர். 97. மா. இறைவன், திருச்சி-14. 98. த. அன்பழகன், கடலூர்-1. 99. பெருஞ்சித்திரன், கெ. கல்லுப்பட்டி. 100. பெ. அன்னகாமு, கெ. கல்லுப்பட்டி.

101 க. நாராயணன், பெகும்பகல்லாக்குடியிருப்பு; 102 வி. இராசமாணிக்கம், எம். ஏ. கோயமுத்தூர் 18; 103 மு. கதிரவன் நெமலி; 104 .... 105 துரை– தெட்சிணாமூர்த்தி, மேலச்செம்மங்குடி; 106 க. சிவானந்தன் திருமலைராயன்பட்டினம்.

107 அரங்க-திருமாறன், புதூர், உரத்தநாடு; 108 க. அன்புமணி, திருச்சி 15; 109 கரி. நடவரசன், நெய்வேலி 3; 110 இரா. தமிழன்பன், வேப்பங்குறிச்சி.

111 ப. துரையரசன், கைகாட்டிப்புதூர்; 112 கோ. நிலவழகன், க. மு. சென்னை 30; 113 க. சி. அகமுடைநம்பி, பி. இ, மதுரை; 114 சு. வலங்கைப்பாண்டியன் மதுரை; 115 சி. குமாரசாமி, எல். எம். இ., மதுரை 116 பொன்-இராமானுசம், சுத்தமல்லி; 117 நெல்லை சு. மணியன், திருச்சி 2; 118 முத்து-செல்வன், அலதூர்; 119 ஆ. ப. தொல்காப்பியன், மொ. ஆலமரத்துப்பட்டி; 120 இரா. தங்கராசன், மாரம்பாடி.

122 ப. பெரியசாமி, விருதுநகர்; 122 பழங்கரைவேள். பழங்கரை; 123 30-ஆம் அணி இந்திய வான்படைத்தமிழன்பர்கள், 124 உ.த.க. பெங்களூர் நகரக்கிளை; 125 செ. தென்னவன், கவுண்டன் பாளையம்; 126 காரை-இறையடியான், காரைக்கால்; 127 .... 128 தே. நே. சித்திரச்செல்வி, ஆரூர் 129 புலவர் இ. தேவநேயச்சித்திரன், கீ. அ. செங்கழுநீர்ப்பட்டு. 130 வே. மு. பொதியவெற்பன், செங்கழுநீர்ப்பட்டு.

131 ந. அரணமுறுவல், கீ. அ. நாயனூர்பாளையம். 132 த. முத்துக்குமரன், க. இ. பாம்பூர்; 133 ஆர். வேணுகோபால், புதுவை-1; 134 இரா. செயராமன், நெய்வேலி 2 135 திருவாட்டி வேளாங்கண்ணி உரோசுமரி, தி. அத்திப்பாக்கம்; 136 தி. ஆ. சண்முகசுந்தரம், திருச்சி 1; 137 மு. இளம்பரிதி, உரத்தநாடு; 138 ப. இளம்வழுதி, உரத்தநாடு. 139 ந. இளமுருகன் அறி. இ. ஆ. ப நீடாமங்கலம்; 140 பி. என். அப்பாசி கவுண்டர், காளிங்கராயன்புதூர்.

141 சிங்கை-செங்கோடன், அம்மாப்பேட்டை, தஞ்சை; 142 இரா. தமிழ்வாணன், நாயனூர்பாளையம்; 143 அ. தங்கராசன், ஈப்போ, மலேசியா; 144 கு. அண்டிரன், நாயனூர்பாளையம் [தெ. ஆ] 145 ப. தாயம்மாள் அறவாணன், சென்னை 29; 146 ச. பாண்டியன், ஈப்போ, மலேசியா; 147 பெ. புதுமைப்பிரியன், மலாக்கா; 148 .... 149 இரா. வெற்றியரசு, நெய்வேலி 1; 150 ப. நன்முல்லை, சிங்கை.

151 இரா. அருட்குவை, நெய்வேலி 3; 152 திருமலை. குமணான், சிங்கை; 153 இ. எசு. சி. மூர்த்தி, பெங்களூர் 16; 154 துரை அருண்மொழி, நெய்வேலி 1; 155 செ. மேதவைன், நெய்வேலி 3 156 த. செகந்நாதன், அம்பலாப்பபடைவீடு; 157 இறைவாணன்-

நிலா, சிங்கப்பூர்; 158 ப. தண்டபானி, கான்பூர்; 159 சே. கணபதி, மலேசியா; 160 புலவர் -குமர. தன்னொளியன், கண்ணமங்கலம், (வட ஆ. மாவட்டம்)

151 ஏ. செல்வராசு, கான்பூர் 8; 162 செந்தமிழ்ச்சேய், பொறி இ. அரசூர், தெ. ஆ. மாவட்டம்; 163. உடுமலைப்பேட்டை அன்பர்கள் அமைப்பாளர் கி. சீதாராமகுப்தா; 164. ம. துரைசாமி, பீடோங்-மலேசியா; 165 எம். ஏ. இளஞ்செல்வன், (எம். இராமு) பீடோங்-மலேசியா; 166 பெ.அரசு, மலாக்கா; 167 இரா. காளிமுத்து கோலாலம்பூர்; 168 மருத்துவர் சி. இராமச்சந்திரன், சேலம்; 169 பி. இலக்குவன், குவைத்து; 170 புலவர் கா. சு. சண்முகம், பல்லடம்.

171 புலவர் ப. சுப்பையன், நாச்சிப்பாளையம், திருப்பூர்; 172 புலவர் திருமேனி, நாகராசன் காரைக்கால்; 173 காரை-அறவாழி, காரைக்கால்; 174 மு. துரைச்சாமி, க. மா. அ. சுலுத்தான்பேட்டை, பல்லடம்; 175 க. தமிழப்பன், அ. அரங்கசாமி, திருப்பூர் 2; 176 சி. அறிவுறுவோன், அம்மையகரம்; 177 திருவாட்டி இராசேசுவரி செந்தில், அம்பாலா; 178 கல்லூர் மணியம். மலாக்கா, 179 பறம்பை. தென்னவன், பறம்புக்குடி. 180 பொ. பொன்னரசன், க. இ. மேலூர்.

181 அர. இராசேந்திரன், க. இ. குளத்துப்பாளையம், பல்லடம் 182 அதியமான், சா. முருகு, ஆசிரியர், அதியமான்குப்பம், திருமுதுகுன்றம். 183 மு. பொய்யாமொழி, காட்டுக்கூடலூர். தெ. ஆ) 184 துரை-வேழவேந்தன், காட்டுக்கூடலூர். (தெஆ) 185 சி. இராசாங்கம், அறி. இளை. தஞ்சாவூர். 186 கு. பெருந்துரை, அதியமான்குப்பம். திருமுதுகுன்றம். 187 பொன். பகலவன், நெய்வேலி 3; 188 கோ. கண்ணன், நெய்வேலி 3; 189 பொன்-தமிழ்முல்லை, சிங்கப்பூர்-2; 190. சேதுகா-முத்துக்குமரன். பல்லடம்.

191 பா. சு. மணியன், சில்லாங்கு-9; 192 கோ. சாந்தாலிங்கம், சில்லாங்கு-9; 193 வி இராமாநுசம், பொறி. இ. நெய்வேலி-1, 194 இரா. ஆறுமுகன், பு. புளியம்பட்டி; 195 மா. கவிச்செல்ல நடராசன், C/o 56. A. P. O; 196 இரா. விசுவநாதன், க. இ. (வணிகம்) தஞ்சாவூர். 197. அன்பு. ந. வை. இளஞ்செழியன், அம்மையன்பட்டி. [தஞ்சை] 198. புலவர் ஒ அரசு, குன்றூர்-2. 199. மு. குமாரசாமி, க. மு. மேலூர்; 200. ந. வெ. பெருமாள். அறி. இ. புதுவை-1.

யும் தென்மொழியாளர்கள் முறையாகக் காலங்கருதிச் செய்து விட்டால் தமிழ் ஞாலம் விரைவில் கைகூடி விடும்! இதில் எள்ளள வும் ஐயம் வேண்டா! —ந. இளஞ்சித்திரன், மன்னார்குடி.

0: 304: பேரன்புடையீர், வணக்கம். "யாருமில்லை; நாங்கள் தாம்!" என்ற தங்கள் இதழின் தலைமைக் கட்டுரையைப் படித்து மகிழ்ந்தேன். இன்று அரச பீடத்தில் அமர்ந்துள்ள முதல்வரும் அவரைச் சார்ந்தவர்களும், தங்கள் பதவி பறிபோய்விடுமே என்ற அச்சத்தால், பலப்பல கூறி வருகின்றனர். தாங்கள் எதற்கும் அஞ் சாது தங்கள் கருத்தை வெளியிட்டமைக்கு மீண்டும் எனது நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன், தமிழ்மொழி கட்டாயப் பாட மானால், தமிழாட்சி, தமிழராட்சி தானே வரும். ஓங்குக தமிழ்! வளர்க தனியாட்சி! —ஈழத்தடிகள், காஞ்சிபுரம் – 3.

0: 305: அன்புடைநல்லீர்! சென்ற இதழ் "தென்மொழி" ஆசிரிய வுரை கண்ணுற்றேன். கழிபேருவகை உற்றேன்.

தங்களின் திட்டவட்டமான ஆணித்தரமான கொள்கை விளக் கங்களை வெளியிட்டது குறித்துப் புதுமை மாந்தர்களும், வியப்புச் சித்தர்களும், சந்துமுனையில் சிந்து பாடுவோரும், அரை வேக்காட்டு அரசியல் புனைவாளர்களும் வியப்படைகின்றனர். தங்களின் நக்கீரத் துணிவை வரவேற்கிறேன்.

"முதலில், பிரிந்து போகும் உரிமை என்றன் பிறப்புரிமை," என்பது, "Freedom is our Birthright" என்ற ஆங்கிலப் பழமொழியின் மூலத்தை விட வலிவு வாய்ந்தது.

"எனக்கு இந்த இந்திய நாட்டு ஆட்சியினின்று பிரிந்து போக வேண்டும் என்ற எண்ணம் வந்ததற்கே இந்த அரசுதான் குற்றவாளி" என்ற அடிப்படை அரசியல் கூற்று அரசியல் கழைக்கூத்தாடிகளுக்குக் கொடுக்கின்ற சவுக்கடியாகும்; பிரிவினை முடியாது என்பது இப் போழ்தின் நிலைமைக்கு மழுப்புகின்ற விடையாகத் திகழுமேயொழிய உலகின் கண்ணுக்கு, விடுதலை விரும்பிகளுக்கு, அரசியல் அறிஞர் களுக்கு அளிக்கின்ற முறையான விடை ஆகாது. பிரிவினை நடவாது என்பவர்கள் அலையை ஆடாதே, தென்றலை வீசாதே, மலரை மணக் காதே, என்று கட்டளையிடும் அறிவிலிகளுக்குச் சமமானவர்கள் என்றால் மிகையாகாது. —மு. அந்தாலன், கள்ளக்குறிச்சி.

0: 306: தென்மொழியா அல்லது தேன்மொழியா என வியக்கும் வண்ணம் தெள்ளுதமிழில் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில், 'தமிழா! நீ உன் தாயை மறந்தாலும் மற, தமிழை மறவாதே!" உன் விழியை மூடினாலும் மூடு, மொழியை விடாதே! எனத் தட்டி எழுப்பி – உணர்வூட்டி, உணர்ச்சியூட்டி – எழுச்சி புகட்டி ஏற்றம் பெற வைக்கின்றது தென்மொழி! "யாருமில்லை; நாங்கள்தாம்" என்ற ஆசிரியவுரை தலையாய அறை கூவல் – பறைசாற்றுங்கள் – படை திரளும். திறனும் திரண்டு நிற்கும் தோளும் உருண்டோடி வரும். மிரண்டோடி விடும் எதிர்ப்பகை!

—ஆர். விசயராமன், க.மு. சென்னை-10.

0: 307: தங்களின் தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகியவற்றைச் சிறிது காலம் படித்தேன். என் உடல் சிலிர்த்தது. யாருக்கும் அஞ்சாமல் ஆளும் அரசுக்கும் அஞ்சாமல் மிகத்துணிவுடன் பல துன்பங்கள்

[அடுத்த பக்கம் பார்க்க]